
பக்கங்கள்:-28

காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 06 | திங்கட்கிழமை | 22.07.2024 | அதிர்வு 356 |
|---|---|---|---|---|---|

## காத்தான்குடியில் கைக்குண்டு மீட்பு!



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு – காத்தான்குடி, பூநொச்சிமுனையில் கைக்குண்டு ஒன்று நேற்று இரவு 06▶



# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீளுருவாக்க ஒன்றிணைவோம்

## சிறீதரன் எம்.பி. பகிரங்க அழைப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

“பொது எதிரியை எதிர்கொள்வதற்காக எமக்குள் உள்ள எதிர்ப்புணர்வுகளைப் புறம் தள்ளி, தனிப்பட்ட நலன்களை முன்னிறுத்தாதுஇனநலன்களைமுன்னிறுத்தும்ஒருகூட்டுத் தலைமையின் உருவாக்கம் குறித்து சிந்திப்பதோடு, தமிழ்த் தேசியத் தளத்தில் இயங்கும் ஒவ்வொரு கட்சிகளினதும் மரபார்ந்த தனித்துவங்களைப் பேணியவாறு, தேர்தல்கூட்டாகஅன்றிதேசத்தின்கூட்டாகத் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைமீளஉருவாக்குவதற்கு தமிழ்த் தேசியத் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டும்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார். 06▶

## வேட்புமனுத் தாக்கலுக்கான தினத்தை இந்த வாரம் அறிவிக்கும் ஆணைக்குழு

### ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கை




“ஜனாதிபதித் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் பல்வேறு வழிகளிலும் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், எவ்வித தடையும் இன்றி அதனை முன்னெடுப்பதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது. இவ்வாரத்துக்குள் வேட்புமனுத் தாக் கலுக்கான தினத்தைத் 06▶



தமிழரசுக் கட்சி விடயம் வழக்குக்குப் போனால் இப்போதைக்கு விவகாரம் தீராது என்று நான் பல தடவைகள் எழுதியமை மட்டுமல்லாமல் சம்பந்தப்பட்டோருக்கு ஓரிரு தடவைகள் தொலை பேசியிலும் நேரத்துடன் கூறியும் பார்த்தேன். வழக்கு வராது என்ற நம்பிக்கையில் என்னவோ, சவால் விடும் பாணியில், முடியுமானால் யாரும் வழக்குக்குப் போய்ப் பார்க்கட்டும் என்று சவடால் பேச்சில் பதில் தந்தார்கள் என்பது இன்னும் நினைவில் நிற்கின்றது.

வழக்கில் எதிராளிகள் எல்லோரும் சேர்ந்து நின்றாலும் கூட, 06▶



# ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் சர்வஜன வாக்கெடுப்பு இல்லை

## றோஹண ஹெட்டியாரச்சி தெரிவிப்பு



"அரசமைப்பின் 22 ஆம் திருத்தத்தை அரசாங்கம் வெளியிட்டுள்ளதைத் தொடர்ந்து ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் சர்வஜன வாக்கெடுப்பொன்றுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படுமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. என்றாலும் அரசமைப்பு திருத்தம் மூலம் ஜனாதிபதி தேர்தலை பிற்படுத்துவதற்கோ ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்வதற்கோ எந்த இடமும் இல்லை."

– இவ்வாறு பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் றோஹண ஹெட்டியாராய்ச்சி தெரிவித்தார்.

அரசமைப்பின் 22ஆம் திருத்தம் தொடர்பாக நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"அரசாங்கம் அவரசமாக அரசமைப்பின் 22 ஆம் திருத்தத்தை வர்த்தமானியில் வெளியிட்டுள்ளதன் மூலம் மக்கள் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. அதாவது, அரசமைப்பின் 22ஆம் திருத்தம் காரணமாக ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் சர்வஜன வாக்கெடுப்பொன்றுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. என்றாலும் 22 ஆம் திருத்தம் மூலம் ஜனாதிபதி தேர்தலை பிற்படுத்துவதற்கோ ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்வதற்கோ எந்த இடமும் இல்லை என்பதை தெளிவாகக் கூறமுடியும்.

சர்வஜன வாக்கெடுப்பு சட்டத்தின் பிரகாரம் சர்வஜன வாக்கெடுப்பொன்று நீதிமன்றம் ஊடாக வந்தாலும் ஜனாதிபதி அது தொடர்பான கட்டளையை தேர்தல் ஆணைக் குழுவுக்கு தெரிவிக்க வேண்டும். அதேபோன்று சர்வஜன வாக்கெடுப்புக்கு ஜனாதிபதி கட்டளை பிரப்பித்து ஒரு மாதத்துக்கு பின்னரே சர்வஜன வாக்கெடுப்புக்கு திகதி அறிவிக்கப்பட வேண்டும். அதனால் ஜனாதிபதி தேர்தலுக்கு திகதி அறிவிக்க தேர்தல் ஆணைக்குழு தற்போது நடவடிக்கை எடுத்திருக்கிறது. இந்த வாரத்துக்குள் திகதி அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கிறோம். செப்டம்பர் மாதம் முடிவடைவதற்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நிச்சயமாக நடத்தப்படும்.

அதனால் 22ஆம் திருத்தம் இந்த காலப்பகுதியில் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டாலும், அதனை அனுமதித்துக்கொள்ள இருக்கும் கால இடைவெளியை பார்க்கும்போது, ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் சர்வஜன வாக்கெடுப்பொன்றுக்கு செல்ல எந்த இடர்பாடும் இல்லை என்பது தெளிவாகிறது. அதனால் 22 ஆம் திருத்தம் ஜனாதிபதி தேர்தலுக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தப் போவதில்லை. இது தொடர்பாக மக்கள் எந்த சந்தேகமும் கொள்ளத்தேவையில்லை.

அதேநேரம் ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் தெளிவாக இரண்டு தடவைகள் தீர்ப்பளித்திருக்கிறது. அதனால் ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள் என்பது உறுதியாக இருக்கிறது. அதன் பிரகாரம் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு அரசமைப்பு திருத்தம் பாதிப்பாக அமையாது. அவ்வாறான நிலையில் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் தற்போதைய சூழலில் 22 ஆம் திருத்தத்தை கொண்டுவராமல் இருந்திருக்க வேண்டும். இதனை அடுத்துவரும் புதிய அரசாங்கத்துக்கு இடமளித்திருக்க வேண்டும்."– என்றார்.

# சட்டப்படி வேலையைச் செய்கின்ற தொழிற்சங்க நடவடிக்கை இன்று

## ஆசிரியர்கள், அதிபர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பு அறிவிப்பு

சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கை திட்டமிட்டபடி இன்று ஆரம்பிக்கப்படும் என ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

சம்பள முரண்பாடு தொடர்பில் கடந்த 9 ஆம் திகதி ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் சுகவீன விடுமுறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் கல்வி அமைச்சர் மற்றும் அரச சேவைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடல் தோல்வியடைந்துள்ளது.

இந்த நிலையில், இன்று சட்டப்படி வேலைசெய்யும் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பின் இணை அழைப்பாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.










# திறந்த சமுதாய பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க வேண்டும் என்கின்றார் சஜித்

“திறமை வாய்ந்த புத்திஜீவிகள் சமூகத்தை உருவாக்கத் திறந்த சமுதாய பல்கலைக்கழகங்கள் திறக்கப்பட வேண்டும். அறிவை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை கட்டி யெழுப்ப, கற்றோர் நிறைந்த புத்திஜீவிகள் சமூகத்தை எமது உருவாக்க வேண்டிய தேவை காணப்படுகிறது.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 351 ஆவது கட்டமாக 11 லட்சத்து 77 ஆயிரம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பன, கண்டி, உடுநுவர, தவுல்கல, வெலிகல்ல உடு அலுதெனிய மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“அறிவை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப, கற்றோர் நிறைந்த புத்திஜீவிகள் சமூகத்தை உருவாக்க வேண்டும்.

இதற்கு எமது நாட்டில் 24 நிர்வாக மாவட்டங்களிலும் 24 திறந்த சமுதாய பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க வேண்டும். இதனூடாகக் கற்றறிந்த புத்திஜீவிகள், சமூகத்தில் அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

இதன் மூலம் பலரும் உயர்கல்விக்கான வாய்ப்பைப் பெறுவதுடன், உயர் கல்வித் தகைமை திறமைகளுடன் கூடிய உயர் வேதனம் பெறும் தொழிலுக்குச் செல்லக்கூடிய தலைமுறை உருவாகும்.

இது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உறுதுணையாக அமையும். அதனடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் திறந்த சமுதாய பல்கலைக்கழகங்கள் திறக்கப்படும்.”– என்றார்.












# புலம்பெயர் தொழிலாளர்கள் நாடு திரும்பியவுடன் கௌரவமாக வாழக்கூடிய சூழல் உருவாக்கப்படும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“புலம்பெயர் தொழிலாளர்கள் தமது சேவைக் காலத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னர் கௌரவமாக வாழக்கூடிய சூழல் உருவாக்கப்படும். கடந்த பொருளாதார நெருக்கடியின்போது நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தந்த அவர்களின் பங்களிப்புக்கு நன்றி.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

குருணாகல் சத்தியவாதி விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற “விகமனிக ஹரசர“ நிகழ்ச்சியின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு புலம்பெயர் தொழிலாளர்களின் பங்களிப்பை பாராட்டுவதற்காக, நாடு முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்ட “விகமனிக ஹரசர“ நிகழ்ச்சி வடமேற்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன், இதில் குருணாகல், புத்தளம், அனுராதபுரம், மாத்தளை, கேகாலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த புலம்பெயர் தொழிலாளர்கள் சுமார் 5,000 பேர் கலந்துகொண்டனர்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நடாத்தும் நலன்புரி உதவித் திட்டத்தின் கீழ் தொழில் முனைவர்களை உருவாக்குவதற்கு புலம்பெயர் தொழிலாளர்கள் பரிந்துரைக்கும் சுயதொழிலை ஆரம்பிக்கத் தேவையான நிதி மூலதனமாக தலா 50,000 ரூபாவையும் ஜனாதிபதி வழங்கினார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில் –

“நாட்டிற்கு அந்நியச் செலாவணி, ஈட்டித்தந்துவிட்டு நாடு திரும்புபவர்களுக்கு புதிய வாதொடர்ச்சி▲ சாங்கம் ஆதரவு அளித்துள்ளது. இது பரிசு அல்லது அன்பளிப்பு அல்ல. நீங்கள் செய்த சேவைக்கு நீங்கள் பெற்ற உரிமை என்றுதான் கூற வேண்டும்.

வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பிய பின்னர் பழைய தொழில்களில் ஈடுபட சிலர் விரும்புவதில்லை.

வாழ்க்கையில் முன்னேறுவதற்கு அது மாத்திரம் போதாது என்று அவர்கள் நம்புகிறார்கள். அப்படி அர்ப்பணிப்பும் வலிமையும் உள்ளவர்களுக்கு உதவும் வகையில் இந்த திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட போது, நீங்கள் நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்தீர்கள். அவ்வாறு நிதி கிடைக்கவில்லை என்றால் நமது பொருளாதாரம் மீண்டு வராது. நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்த நேரத்தில் நான் நாட்டைக் பொறுப்பேற்றேன்.

எரிபொருள் இல்லாத, உரம் இல்லாத, எதிர்காலம் இல்லாத நாட்டை நான் ஏற்க வேண்டியதாயிற்று. நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்லும்போது, முதல் சில மாதங்களில் நாம் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. நீங்கள் பணத்தை அனுப்பவில்லை என்றால், எங்களால்

தொடர்ச்சி▼












# புலம்பெயர் தொழிலாளர்கள் நாடு திரும்பியவுடன் கௌரவமாக வாழக்கூடிய சூழல் உருவாக்கப்படும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

தொடர்ச்சி▲

நிலைமையை சமாளிக்க முடியாமல் இருந்திருக்கும்.

மேலும் சரியான நேரத்தில் உரங்களை வழங்க முடிந்ததால், சென்ற போகங்களில் வெற்றிகரமான அறுவடை கிடைத்தது. இதன்மூலம் நமது நாட்டின் பொருளாதாரம் முன்னேறியது. நீங்கள் நாட்டுக்கு அனுப்பிய ஒவ்வொரு டொலருக்கும் மதிப்பு அதிகம். அதற்காக அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

உங்களது பங்களிப்பின் காரணமாக கடந்த சிங்கள புத்தாண்டு, வெசாக், பொசன் பண்டிகைகளை சிறப்பாக கொண்டாட எம்மால் முடிந்தது. இந்த நிலையில் இருந்து முன்னேறி நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும். எப்பொழுதும் கடன் பெற்று பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது.

இதுவரை நாம் பெற்ற வெளிநாட்டு கடனைத் திருப்பி செலுத்தும் வகையில் சலுகைகளைப் பெற்றுள்ளோம். ஆனால் கடனை திருப்பிச் செலுத்துவதால் மாத்திரம் நமது பிரச்சினைகள் தீர்ந்துவிடாது.

நமது அந்நிய செலாவணியை அதிகரிக்க வேண்டும். தேவையான அளவு அந்நியச் செலாவணி கிடைக்கும் வரை கடன் பெறவேண்டியுள்ளது. நாம் கடன் பெறும்போது, நம் கடன் அதிகரிக்கிறது. எனவே, அந்நியச் செலாவணி அளவை அதிகரிக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

வெளிநாட்டு தொழிலுக்குச் செல்பவர்களுக்கு முறையான பயிற்சி அளிப்பது அவசியம். தொழிலை முடித்துவிட்டு நாடு திரும்பும் போது தொழில்சார் அறிவு கொண்ட தொழில் முயற்சியாளர்களாக உங்களை மாற்றத் தேவையான வேலைத் திட்டத்தைத் தயார் செய்யுமாறு அமைச்சருக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன். நாம் ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு செல்ல வேண்டும்.

வெளிநாட்டு முதலீடுகளைப் பெறுவதுடன் சுற்றுலாப் பயணிகளையும் நாட்டுக்கு அழைத்து வர வேண்டும். இந்தப் புதிய பாதையில் நாடு முன்னேற வேண்டும்.

மேலும், நாட்டில் விவசாயம் முன்னேற வேண்டும். நெல் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது. அதற்காக விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை தொடங்கியுள்ளோம்.

ஒரு நாடாக நாம் அச்சமின்றி முன்னேற வேண்டும். பாரிய அளவிலான நிறுவனங்களுக்கு முதலீட்டாளர்கள் அதிகம் வருகிறார்கள். இது ஒரு நல்ல நிலைமையாகும். அதற்குத் தேவையான வசதிகளை செய்து கொடுக்க அரசாங்கம் செயல்பட்டு வருகிறது.

ஆனால் அது மாத்திரமின்றி, இந்நாட்டின் சாதாரண மக்களையும் முன்னேற்றுவதே எனது நோக்கமாகும். அதற்குத் தேவையான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

அதற்காக 'அஸ்வெசும' மற்றும் 'உறுமய' வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 'உறுமய' வேலைத் திட்டத்தின் மூலம் நாட்டு மக்கள் அனைவரும் காணி உரிமைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். அத்துடன் சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்குத் தேவையான கடன்களை வழங்க 50 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், நாடு முன்னேறும்போது, கீழ் மட்ட மக்களை முன்னேற்றத் தேவையான திட்டத்தை தயாரித்துள்ளோம்.

நாட்டில் ஏற்றுமதி பொருளாதாரத்தை உருவாக்கும் போது, தமது கிராமத்தின் பொருளாதார வளர்ச்சியில் தாம் அக்கறை செலுத்த வேண்டும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பொறுப்பாக இருக்கும் அதேவேளையில், கிராமத்தின் வளர்ச்சிக்கு தேவையான உதவிகளையும் செய்து வருகிறோம். மீண்டும் நாட்டின் எதிர்காலத்துடன் விளையாட முடியாது."– என்றார்.




## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழக்கு இனி இப்போதைக்கு முடியாது என்பதுதான் யதார்த்த நிலைமை. ஆகக் குறைந்தது 2025 முற்பகுதியில்தான் தீர்வு தப்பித் தவறிக் கிடைக்கலாம் என்ற நிலைமை.

எதிராளிகளில் நால்வர் தத்தமது தரப்புப் பதில்களை அணைப்பதற்காக வரும் 30 ஆம் திகதி வழக்கு இப்போதைக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. மாவை சேனாதிராஜா, சிறிதரன், குகதாசன், யோகேஸ்வரன் ஆகிய நால்வரின் தரப்புகளும் 30 ஆம் திகதி தவணையின் போது தத்தமது பதில்களை அணைப்பார்களா அல்லது இன்னமும் இழுத்தடிப்பார்களா என்பது அன்றைய தவணையின் போதுதான் தெரிய வரும்.

அன்று பதில்கள் அணைக்கப்பட்டாலும், அடுத்த கட்டத்திற்கு வழக்கு நகர மிக நீண்ட காலம் பிடிக்கும்.

இடையீட்டு வழக்காளியாகச் சேர்வதற்கு விண்ணப்பித்துள்ள – சிறீதரன் தரப்பு ஆதரவாளரான – ஜீவராஜாவின் மனுத் தொடர்பில் விசாரித்து முடிவெடுக்க இன்னும் ஓரிரு மாதங்கள் செல்லும் என நினைக்கிறேன்.

அது முடிந்த பின்னர்தான், எட்டு எதிராளிகளின் பதில்களின் அடிப்படையில் வழக்காளியுடன் இணக்கமான ஒரு தீர்மானத்துக்கு வரக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றனவா என்பதை நீதிமன்றம் மேலோட்டமாக ஆராயும். ஆராய வேண்டும்.

அப்படி இருக்குமாயின், அது குறித்து பேசுவதற்காக 'விளக்கத்துக்கு முந்திய கலந்துரையாடலுக்கு' ஒரு திகதியை நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும்.

வழக்கமாக தரப்புக்களின் பதில்கள் அணைக்கப்பட்டு இணக்கமான தீர்வுக்கான வாய்ப்பு இருப்பதாக நீதிமன்றம் அவதானித்தால் அந்த திகதியில் இருந்து மூன்று மாதங்கள் முதல் ஐந்து மாதங்கள் வரையான ஒரு காலப்பகுதியில் இந்த விளக்கத்துக்கு முந்திய கலந்துரையாடலுக்கானதிகதியைநீதிமன்றம்தீர்மானிக்க வேண்டும் என சிவில் நடவடிக்கைகள் சட்டக் கோவையில் கடந்த வருட இறுதியில் இது தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தம் கூறுகிறது.

அப்படிப் பார்த்தால் ஜூலை 30ஆம் திகதி நடைபெறும் வழக்குத் தவணையின் போது விளக்கத்துக்கு முந்திய கருத்தமர்வுக்கு முடிவு செய்யப்பட்டாலும் அது இந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில்தான் சாத்தியமாகும் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனினும், ஜீவராஜாவின் விண்ணப்பம் தொடர்பான விடயத்தின் முடிவின் பின்னர்தான் அந்தத் திகதியைத் தீர்மானிக்க முடியும் என்பதால் அது பெரும்பாலும் அடுத்த தைப்பொங்கலுக்குப் பிறகுதான் சாத்தியமாகும்.

விளக்கத்துக்கு முந்திய கருத்தமர்வு தைப்பொங்கலுக்குப் பின்னர் என்றால் வழக்கு முடிவு இனி அடுத்த வருடத்தின் இரண்டாம் காலாண்டில்தான் சாத்தியமாகும்.

அதற்குப் பின்னரும், இப்போது சிறிதரன் தரப்பு குறிப்பிடுகின்றமைபோல மூலக்கிளைகளிலிருந்து கூட்டங்கள் யாவற்றையும் புதிதாக நடத்தித்தான் தேசிய மாநாடு என்றால் மாநாட்டுக்கு மேலும் பல காலம் பிடிக்கும் என்பது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

மாவை காட்டில்தான் நல்ல மழை. 12 ஆண்டுகள் தாண்டியும் தலைவராக தொடரக்கூடிய வாய்ப்பு. தமிழரசுக் கட்சிதான் பாவம். அதற்கு இது வனவாச காலம்தான்.

\+ \+ \+

நீதியரசர் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாக ஒரு விடயமும் இல்லை. எனினும் மாநாட்டுக்கு இரண்டு, மூன்று நாள்களுக்கு முன்னர் அரசியல் பார்வையாளர் ஒரு தகவல் சொன்னார்.

"நான் சொல்கிறேன் கேளுங்கள். இந்த மாநாட்டுக்கு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் (குத்துவிளக்கு அணியின்) ஐந்து கட்சிகளின் தலைவர்களும் வர மாட்டார்கள். தலைகாட்ட மாட்டார்கள். சில சமயம் உடையார் வீட்டு பொல்லுகள் பிரதிநிதிகளாக வரலாம். அழைக்கப்பட்டோர் தொடர்பில் சிக்கல்கள் உண்டு." – என்று அடித்துக் கூறி இருந்தார் அவர். நான் நம்பவில்லை. ஆனால் கடைசியாக அதுதான் நடந்திருக்கின்றது போலும்.

பார்வையாளராக வந்த மாவை சேனாதிராஜா மேடைக்கு அழைக்கப்படவில்லை. கடைசி வரை பார்வையாளர் வரிசையில் அமர்ந்திருந்து நடந்துவற்றைப் பார்த்துச் செல்ல வேண்டியதாக இருந்தது. தமிழரசு தலைவருக்கு – தானைத் தளபதிக்கு – வந்த சோதனை பாவமாக இருந்தது...!

## காத்தான் குடியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீட்கப்பட்டுள்ளது.

குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான வீடு ஒன்றுக்கு அருகிலுள்ள வீடு ஒன்றின் முன்னால் உள்ள வடிகான் பகுதியில் இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

பூநொச்சிமுனையில் பச்சை வீட்டுத் திட்டம் என அழைக்கப்படும் முகைதீன் ஜும்ஆஹ பள்ளி வீதியில் வீடு ஒன்றின் முன்னால் உள்ள வடிகானுக்கு அருகில் கைவிடப்பட்ட கைக்குண்டு ஒன்று கிடப்பதை நேற்று இரவு அவதானித்த பொதுமக்கள் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இதனையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்ற காத்தான்குடி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்ட வீட்டுக்கு அருகிலுள்ள வீட்டின் மீது கடந்த 15 ஆம் திகதி இரவு இனந்தெரியாதோரால் தயாரிக்கப்பட்ட புதிய வகையான குண்டு வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## வேட்புமனுத் தாக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதித் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு அரசு பல்வேறு வழிகளிலும் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், எவ்வித தடையும் இன்றி அதனை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது. அதற்கமைய இவ்வாரம் வேட்புமனுத் தாக்கலுக்கான தினத்தை அறிவிக்கவுள்ளதாக ஆணைக்குழு அறிவித்துள்ளது. தேர்தல் சட்டத்துக்கமைய திங்கள் தவிர்ந்த செவ்வாய் – வெள்ளிக்கிழமை நாளகளில் அதனை அறிவிக்க முடியும்.

ஜனாதிபதி வேட்பாளர்கள் ஏதாவதொன்றைப் பேசிக் கொண்டிருக்காமல் கடனை மீளச் செலுத்த ஆரம்பித்த பின்னர் அதனை எவ்வாறு செலுத்துவது என்ற திட்டத்தை முன்வைக்க வேண்டும். அந்நியச் செலாவணியின் ஊடாக வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதே ஐக்கிய மக்கள் சக்தியின் திட்டமாகும். அநுரகுமார திஸாநாயக்கவும், ரணில் விக்கிரமசிங்கவும் தமது திட்டங்களை முன்வைக்க வேண்டும்.

பொருள்களின் விலைகளைக் குறைத்து, வரி சுமைகளைக் குறைத்து தமக்கு நிவாரணம் வழங்கக் கூடிய தலைவர் ஒருவரையே மக்கள் எதிர்பார்க்கின்றனர். அரச வருமானத்தை டொலர்களால் அதிகரித்தால் மாத்திரமே இதனைச் செய்ய முடியும். முன்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரசித்தப்படுத்தியவர்களே தற்போது அநுரகுமார திஸாநாயக்கவை வெளிநாட்டுக்கு அழைத்து அவரைப் பிரபலப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். தேர்தலின் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷவைப் போன்ற நிலைமையே இவர்களுக்கும் ஏற்படும்." – என்றார்.

## தமிழ்த் தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவரது உரையின் முழு வடிவம் வருமாறு:–

"கடந்தஏட்டுத்தசாப்தங்களுக்குமேலாக ஈழத்தமிழர்களின் சுதந்திரத்துக்காக, அவர்களின் இறையாண்மையை நிலைநிறுத்துவதற்காக, சிங்கள பௌத்த ஒடுக்குமுறை ஆட்சியாளர்களுக்கு எதிராக, இரத்தமும் சதையுமாக நடைபெற்று வருகின்ற போராட்ட வலியின் நீட்சியில் உருவான, ஈழத்தமிழர்களின் சுதந்திரத்துக்கான அரசியல் இயக்கங்களில் ஒன்றாகத் தன்னைக் கட்டமைத்துக் கொண்டுள்ள "தமிழ் மக்கள் கூட்டணியின்" முதலாவது தேசிய மாநாட்டில் உரையாற்றக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை, காலத் தேவை கருதிய வரலாற்றுச் சந்தர்ப்பங்களில் ஒன்றாகவே நான் பார்க்கின்றேன்.

ஆத்மார்த்தமான அரசியல் பண்பாட்டின் அடிப்படையில், புதிய உலகச் சூழ்நிலைகளை அனுசரித்தவாறு எமது இனத்தின் சமத்துவ வாழ்வுக்கான பயணத்தை நாம் எல்லோரும் இணைந்து முன்னெடுக்க வேண்டுமென்ற காலக் கடமை எம் ஒவ்வொருவரது கரங்களிலும் தரப்பட்டிருக்கின்றது.

ஈழத்தமிழினத்தின் இறையாண்மைக்கு நீதிவேண்டி நாங்கள் மேற்கொள்ளும் அறவழிப் போராட்டங்களையும், அபிலாஷை வெளிப்பாடுகளையும் சிங்கள தேசம் எப்போது புரிந்து கொள்ளத் தலைப்படுகின்றதோ, அப்போதுதான் அர்த்தம் மிகுந்த இலங்கையைக் கட்டியெழுப்ப முடியும். அரச இயந்திரத்தின் கொள்கை வகுப்பையும், இனவாத நோக்கில்

07

# தமிழ்த் தேசியக்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கட்டமைக்கப்பட்ட அதிகார பீடங்களின் செயல்முறைகளையும் நாங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதில் தெளிவுற்றுள்ள போதும், அடிப்படை விருப்புகளைக் கோருகின்ற எமது அரசியல் உரிமையின் மீது போர்தொடுக்கும் சிங்கள பௌத்த பேரினவாதத்தை, "தமிழ்த்தேசியம்" என்னும் ஓர் குடையின் கீழ் நின்று கூட்டாய் எதிர்க்கும் திராணியை உருவாக்குவதில்தான் ஈழத் தமிழினம் இன்று பெருந்தோல்வியைச் சந்தித்திருக்கின்றது.

எட்டு தசாப்தங்கள் கடந்தும், நீர்த்துப்போகாத அரசியல் அபிலாஷைகளைக் கொண்டிருக்கின்ற ஈழத்தமிழர்களின், அடிப்படை மற்றும் அரசியல் உரித்துகளை அங்கீகரித்து, அர்த்தமுள்ள அரசியல் அதிகாரப் பகிர்வின் மூலம் இனச் சமத்துவத்தை அங்கீகரிக்கின்ற, பொருளாதார சுபீட்சமுள்ள இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு, இலங்கை அரசு தொடர்ந்தும் தவறி வருகிறது என்பதை பிராந்திய மற்றும் சர்வதேச அரசுகள் உணர்ந்துகொள்ளும் காலமும் நேரமும் நெருங்கி வந்திருப்பதை புரிந்துகொள்ள முடிகின்றது.

இத்தகையதோர் சாதகத்தன்மை மிக்க அரசியற் சூழமைவில் ஈழத்தமிழர்களின் குரலை, தமிழ்த் தேசியம் என்னும் இயங்குதளத்தில் நின்று கூட்டுக் குரலாக ஒருங்கிணைக்க வேண்டியது அவசியமானது. தமிழ்த் தேசிய அரசியலில் குறுகிய மற்றும் நீண்ட கால இலக்குகளைத் தீர்மானித்தல், சர்வதேச உறவுகளை மெய்நிலையில் வலுப்படுத்தல், இளைய தலைமுறை அரசியலாளர்களை வலுப்படுத்தல், மக்களை அரசியல்மயப்படுத்தல், மக்களின் உணர்ச்சியையும் திரட்சியையும் ஒரு புள்ளியில் சந்திக்க வைத்தல் உள்ளிட்ட அரசியற் செல்நெறிகளை செயலுருப்பெறச் செய்ய வேண்டியுள்ளது.

மேற்கூறிய அத்தனையையும், இன நலன் ஒன்றையே நோக்காகக் கொண்ட நல்ல தலைமைத்துவத்தால் மட்டுமே ஏற்படுத்த முடியும். வினைத்திறனான தலைமைப் பண்புகளுக்குள் இவை அனைத்தும் அடங்கும். இப்போது நம் இனத்துக்கு இருக்கும் மிகப்பெரிய இடைவெளி ஆதர்சனத் தலைமையற்ற தன்மையே. சனத்திரட்சியை உருவாக்கக் கூடிய, ஜனவசியம் மிக்க, மிக நேர்த்தியான தலைமைத்துவத்தை யாராலும் சரியான முறையில் கொடுக்க முடியவில்லை. அல்லது அத்தகைய அணுகு முறைகள் குறித்து சிந்திக்கவில்லை. ஆனால், அதற்கான களச்சூழலை உருவாக்க வேண்டியது காலப் பெரும் பணியாக எம்முன் உள்ளதை நாம் உணரத் தலைப்பட வேண்டும்.

நம் எதிரிகள் ஒரு காலத்தில் நம் தலைவர்களை அழித்தார்கள். இன்று தலைவர்கள் உருவாகுவதற்கான சூழலை அழிக்கின்றார்கள். பொது எதிரியை எதிர்கொள்வதற்காக எமக்குள் உள்ள எதிர்ப்புணர்வுகளை புறம்தள்ளி ஒரு பொதுவான அரசியல் இயக்கத்துக்குள் நாம் நிலமும் புலமுமாக இணைய வேண்டும். இந்தப் புள்ளியில்தான் யதார்த்தப் புறநிலைகளைப் புரிந்தவர்களாக, தனிப்பட்ட நலன்களை முன்னிறுத்தாது இன நலன்களை முன்னிறுத்தும் ஓர் கூட்டுத் தலைமையின் உருவாக்கம் குறித்தும், அத்தகைய நேர்கோட்டில் இயங்கும் ஒவ்வொரு கட்சிகளினதும் மரபார்ந்த தனித்துவங்களைப் பேணி ஒற்றுமைக்குள் வேற்றுமையும் வேற்றுமைக்குள் ஒற்றுமையும் காணுவது குறித்தும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீள உருவாக்குவது குறித்தும், அவ்வாறு மீளுருவாக்கம் பெறும் கூட்டமைப்பு என்பது தேர்தலுக்கான கூட்டமைப்பு என்பதைத் தாண்டி தேசத்துக்கான கூட்டமைப்பாக கட்டியெழுப்பப்பட வேண்டும் என்றும், அதற்குத் தமிழ்த் தேசியத் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் இந்த மாநாட்டின் ஊடாக நான் அழைப்பு விடுக்கின்றேன்.

இன்று தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகள் மக்களிடமிருந்து அந்நியப்பட்டு நிற்கின்றன. இங்குதான் உரிமை அரசியலை சலுகை அரசியல் வெல்கின்றது. இந்த நிலைமையைச் சீர்செய்ய தமிழ்த் தேசிய அரசியல் மறுசீரமைப்பு முயற்சிகளை விரைவுபடுத்த வேண்டும்.

இனத்துவ அரசியலை முன்னெடுக்கும் சமநேரத்தில், தேர்தல் அரசியலையும் எதிர்கொள்ள வேண்டிய தேவை எம்மிடத்தே திணிக்கப்பட்டிருக்கின்றது. தேர்தல்கள் என்பதில் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் – இளைய அரசியலாளர்களுக்கான பயில்களமாகவும் மாகாண சபைத் தேர்தல்கள் என்பது அறிவும் ஆற்றலும் மிக்க துறைசார் விற்பன்னர்களை பயன்கொள்ளும் களமாகவும், நாடாளுமன்றத் தேர்தல் என்பது இனத்தின் அபிலாஷைகளை சர்வதேச அரங்குக்கு கொண்டு செல்லும் விருப்பும் வாண்மைத்துவமும் மிக்க தலைவர்களுக்கான களமாகவும் அமைய வேண்டும். இந்தச் சிந்தனைத் தெளிவு கட்சி ரீதியாக கட்டியெழுப்பப்பட வேண்டும்.

இவற்றைத் தாண்டி, நிலத்தையும் புலத்தையும் நாம் உணர்ச்சிகளால் மட்டுமே பிணைத்து வைத்துள்ளோம். இது அறிவு மைய பிணைப்பாக மாறவேண்டும். இந்த விடயத்தில் உள்ள பலம் பலவீனங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்த வேண்டிய காலத்தேவை எழுந்துள்ளது. தமிழ்த் தேசிய அரசியலின் எதிர்கால நிலைத்திருப்பு நோக்கியும் தமிழினத்தினுடைய விடுதலை வேணவாக்களை முன்கொண்டு செல்வதற்கும் நிலத்திலும் புலத்திலும், தாய்த் தமிழகத்திலும் வாழ் தமிழர்கள் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

ஈழத்தமிழர்கள் எவ்வாறு கொள்கை வேறுபாடுகளோடும் அரசியல் சித்தாந்த வேறுபாடுகளோடும் திசைவேறாக பிரிந்திருக்கின்றார்களோ அதேபோன்றதொரு பிரிவினைகள் மிகுந்த நிலை தான் புலத்திலும் வேரோடியிருக்கின்றது. விடுதலை வேண்டிப் பயணிக்கும் எங்கள் இனம், தன் இலக்கை அடைந்துகொள்ளும் எதிர்காலப் பயணங்களில் இதனால் பல்வேறு நெருக்குதல்களை எதிர்கொள்ள நேரிடும்.

ஆழமாக நோக்கினால் ஈழத் தமிழ்த் தேசிய இனம் தொடர்ந்தும் தொடர்ந்தும் தன் வல்லமைகள் அத்தனையையும் இழந்து கொண்டேயிருக்கின்றது. மாறாக எதையும் பெறவில்லை. அது அரசியல் தீர்வாக இருக்கலாம். நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்தியாகவும் இருக்கலாம். கருதத்தக்க எதையும் சுதந்திரத்துக்குப் பின் எங்கள் இனம் பெறவேயில்லை. இனத்தின் விடுதலை குறித்த சிந்தனைகள் வலுக்குன்றத் தொடங்கியிருக்கும் எங்களின் இரண்டாம் தலைமுறையினரிடத்தே, எங்கள் அறப்போர் குறித்த புரிதல்கள் குறுகியிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடிய இந்த நாட்டின் ஜனாதிபதி, நாற்பது வயதுக்கு உட்பட்ட இளைய தலைமுறையினர் அரசியல் நாட்டமற்றவர்களாக இருக்கின்றார்கள் என்ற கருத்தை மிக நாசூக்காகப் பதிவு செய்திருந்தார். ஒருவகையில் பார்த்தால் அரசியல் தெளிவும் கொள்கைப் பிடிப்பும் மிக்க இளையோரை வழிப்படுத்துகின்ற, அரசியல் நெறிப்படுத்துகின்ற சமூகப் பொறுப்பிலிருந்து நாம் தவறி வருகின்றோம் என்பதை உணர முடிகின்றது.

ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகள் எவை என்ற கேள்வியை எங்கள் இளைய தலைமுறையை நோக்கி எழுப்பினால், நிலப்பறிப்பு, காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்கின்ற மூன்று தளநிலைகளுமே அவர்களால் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. ஆனால், அந்த மூன்று பிரச்சினைகளும் இனவிடுதலைப் போருக்கான களத்தைத் திறக்கவில்லை என்கின்ற பொதுப் புரிதல் இன்று எங்களிடத்தே இல்லை.

பலாலி விளிம்பு முதல் பொத்துவில் வரை தமிழர்களின் மரபுவழித் தாயகமாக எங்கள் வசமிருந்தபோதே எங்கள் இனத்தின் அறப்போர் ஆரம்பித்திருந்தது என்பதையும், மேற்சொன்ன காரணங்கள் அந்தப் போர் சார்ந்து பின் வந்த நாட்களில் வலிந்து திணிக்கப்பட்ட துணைக்காரணங்கள் தாம் என்பதையும் உணரத் தலைப்பட்டால் தான், இன விடுதலைப் போரின் அறநிலை சார் அடுத்த களங்களை உருவாக்க முடியும்.

ஆகவே, கொள்கை ரீதியாக ஒன்றுபட்டுச் செயற்படுகின்ற ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளையும் அரவணைத்தவாறு புலம்பெயர் தேசக் கட்டமைப்புகளுடனும் இணைந்த வகையில் தமிழர்களின் தாகம் வெல்ல உழைப்பதே இங்குள்ள ஒவ்வொருவரினதும் முதன்மைக் கடமையாகும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன்.

எமது சிந்தனைகளை மீள் வடிவமைப்புக்கு கொண்டுவருவதன் மூலம் காலத்தின் வேகத்துடனும், பூகோள மாற்றங்களுடனும் எமது மக்களின் அபிலாஷைத் தளங்களிலிருந்து தடம் புரளாது பயணிக்க வேண்டியுள்ளது. இந்த நெருக்கடிமிக்க சூழலை எளிதாகக் கையாள்வதாயின், தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும், புலத்திலிருந்தவாறு இனத்தின் விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் உறவுகளும் ஒருங்குசேர தம் அரசியல் பயணத்தை முன்கொண்டு செல்வதற்கான எதிர்கால வழிவரைபடம் ஒன்றையும் அதுசார் கொள்கை வகுப்புகளையும் உருவாக்க வேண்டும்.

அத்தகையதோர் தளத்தில் நின்று எல்லாத் தரப்பினரையும் இணைத்துச் செயலாற்றுவதன் தேவையுணர்ந்த ஒருவனாக, அந்தத் தளத்தின் இணைப்புப் பாலமாக இருந்து என் எல்லா இயலுமைகளைக் கடந்தும் ஈழத்தமிழினத்தின் அரசியல் வேட்கையைச் சுமந்த பயணத்தின் பங்குதாரராக செயலாற்றுவதில் எனக்கிருக்கும் விருப்பையும், கடமையையும் நான் இவ்விடத்தில் வெளிப்படையாகவே பதிவு செய்து நிறைவு செய்கின்றேன்.”

– என்றார்.


Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
JULY
27
2024
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
FM
88.9 HD3 & 105.9
PRINTING PARTNER
INK DRIP
E PAPER PARTNER
முரசு
DESIGN BY
DESIGN WOLF.CA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மறக்க முடியாத கருப்பு ஜூலை

அரசுப் படைகளுக்கு எதிராகத் தமிழ்ப் போராளிகள் நடத்திய தாக்குதலில் முதல் தடவையாக சிங்கள இராணுவம் எதிர்கொண்ட பேரிழப்பை அடுத்து, அதற்காக அப்பாவித் தமிழ் மக்கள் மீது பௌத்த - சிங்களப் பேரினவாதம் கட்டவிழ்த்துவிட்ட படு பயங்கரமான - மிக மோசமான - காட்டுமிராண்டித்தனமான - பழிவாங்கல் நடவடிக்கைகள் அரங்கேறிய ஆடிக் கலவர நினைவு நாள்கள் இந்த வாரத்தில் வருகின்றன.

யாழ் திருநெல்வேலியில் 41 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டமைக்கு பழிவாங்கும் பேரினவெறித்தனம் இலங்கைக்கு தீவு முழுவதிலும் இனப்படுகொலையாக தலைவிரித்தாடியது.

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆசீர்வாதத்துடனும், அதன் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் இசைவுடனும், அமைச்சர் சிறில் மத்தியூ போன்றோரின் வழிகாட்டுதல்களுடனும் தமிழர்களுக்கு எதிரான வன்முறை பெரும் கொடூரமாக அரங்கேறியது.

ஜூலை 24ஆம் திகதி தலைநகர் கொழும்பிலும் பிற இடங்களிலும் ஊழித்தீயாய்ப் பற்றி எரிந்த இனவழிப்புக் கொடூரத்தில் சுமார் மூவாயிரம் தமிழ் உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. ஒன்றரை லட்சம் பேர் வீடு, வாசல்களை இழந்து ஏதிலிகளாயினர். தமிழர்களின் ஏறத்தாழ எட்டாயிரம் வீடுகளும், ஐயாயிரம் வணிக நிறுவனங்களும் அழிக்கப்பட்டன. எரிக்கப்பட்டன. நாட்டின் பொருளாதாரத்திலும் அது பேரழிவை ஏற்படுத்தியது.

பன்னாட்டு நீதித்துறை வல்லுநர்கள் ஆணையத்தினரும், இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியும் சிங்கள அரசின் இந்த காட்டுமிராண்டித்தனத்தை இனவழிப்பு அல்லது இனப்படுகொலை என வர்ணித்தனர்.

அடுத்த கால் நூற்றாண்டு காலம் இலங்கையையே புரட்டிப்போட்ட இனப்போரின் ஆரம்பமாக இந்த ஆடிக் கலவர அனர்த்தத்தை அவதானிகள் விமர்சிக்கின்றனர்.

இலங்கைத் தமிழர்களின் தேசிய ஆன்மாவின் அழியாத பெரும் வடுவை - ஆற்றொணாத்துயரத்தை - பதித்த ஒரு பெரும் கொடூரத் தொடர் நிகழ்வாக இந்தக் கறுப்பு ஜூலைக் கலவரம் கடந்து செல்கின்றது.

இலங்கை தீவில், தமிழ்த் தேசிய இனமும், சிங்கள தேசிய இனமும் ஒன்றுபட்டு ஒருநாடாக ஐக்கியத்துடன் வாழ்வதற்கான சாத்தியம் அறவே இல்லை என்ற உறுதி உரையை எழுதிய நிகழ்வாக இந்த ஜூலைக் கலவர அனர்த்தம் வரலாற்றில் முன்னெப்போதுமே இல்லாத குரூரமாக அரங்கேறி அடங்கியது.

கலவரம் என்றால் குறைந்தது இரண்டு தரப்புகளுக்கு இடையேயான மோதலின் தொடராக அதனை கணக்கெடுக்க முடியும். ஆனால் 1983 இல் கட்டவிழந்தது ஒரு சிறுபான்மை இனத்தின் மீது பேரினவாத இனவெறியாளர்கள் கட்டவிழ்த்து விட்ட - ஒரு பக்கத்திலிருந்து நடத்தப்பட்ட - இனவழிப்புக் கொடூரத் தாக்குதல் மட்டுமே.

அதனால் இது ஆடிக் கலவரம் அல்ல. ஆடி மாத இனவழிப்பு வெறியாட்டம் தான்.

தமிழினத்தின் மீது இந்த மோசமான காட்டுமிராண்டித்தனத்தை கட்டவிழ்த்துவிட்ட பௌத்த - சிங்கள பேரினவாதம், அதற்காக அடுத்த இரண்டரை தசாப்த காலம் இனப்போர் என்ற பெயரில் கட்டுமட்டில்லா விலையைக் கொடுக்க வேண்டியதாயிற்று. 83 ஆடி கலவரத்தில் விதைத்த விதைக்கு அடுத்த இரண்டரை தசாப்த காலம் வினையை அறுவடை செய்ய வேண்டிய அலங்கோலம் - அவலக் கோலம் - கொழும்புக்கு நேர்ந்தது.

அந்தக் கொலை வெறித் தாண்டவத்தை தமிழினத்தின் மீதான அச்சுறுத்தலாக முன்னெடுத்த சிங்கள பேரினவாதம், அடுத்த இரண்டரை தசாப்த காலம் அந்தக் கொலை வெறியாட்டம் திரும்பத் தன் மீதே இலகுவாக திணிக்கப்பட்டு விடுமோ என்ற அச்ச உணர்வில் அழுத்தி அல்லாடும் நிலைமையும் கூட நடைமுறையில் நீடித்தது.

பேரினவாதப் பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிட்ட அந்த வன்மத்தின் - கொடூரத்தின் - ஆழமான அதிர்வுகள் இன்னும் இலங்கைத் தீவு எங்ஙனும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை.



# உதயநிதி ஸ்டாலினை துணை முதல்வராக நியமிக்கப்பட்டால் வரவேற்க மாட்டோம்

## அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவிப்பு

"அமைச்சர் உதயநிதி, கருணாநிதியின் பேரன், ஸ்டாலினின் மகன் அவ்வளவு தான். அவர் துணை முதல்வராக நியமிக்கப்பட்டால் வரவேற்க மாட்டோம்."

– இவ்வாறு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி முன்னிலையில், மாற்றுக் கட்சியினர் அ.தி.மு.க-வில் இணையும் நிகழ்ச்சி, சேலத்தை அடுத்த ஓமலூரில் உள்ள அ.தி.மு.க. புறநகர் மாவட்ட அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில், முன்னாள் அமைச்சர் ஓ.எஸ்.மணியன், சேலம் புறநகர் மாவட்டச் செயலாளர் இளங்கோவன் உள்பட அ.தி.மு.கவினர் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"ஏழை மக்கள், தொழிலாளர்கள் குறைந்த விலையில் தரமான, சுவையான உணவினை வயிறார அருந்த வேண்டும் என்பதற்காக 664 இடங்களில் அம்மா உணவகங்களை மறைந்த முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்தார். அவரது காலத்திலும், அவரது மறைவுக்குப் பின்னரும் அம்மா உணவகங்கள் சிறப்பாக செயல்பட்டு வந்தன.

ஆனால், தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்னர், அம்மா உணவகங்களுக்கு தரமான உணவுப் பொருட்கள் வழங்கப்படவில்லை. இதனால், மக்களுக்கு தரமான உணவு வழங்காததால், அம்மா உணவகங்களுக்கு சாப்பிட வருவோரின் எண்ணிக்கை குறைந்தது. அங்குள்ள பணியாளர்களும் பாதியாக குறைக்கப்பட்டனர். சென்னையில் 407 அம்மா உணவகங்கள் இருந்த நிலையில், அதில் 19 உணவகங்களை மூடிவிட்டனர்.

அம்மா உணவகம், ஏழைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் வரப்பிரசாதம். அதனை கவனிக்காததால், இந்த அரசு மீது மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் வெறுப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் தான், அம்மா உணவகத்துக்கு சென்று முதல்வர் ஆய்வு செய்து, நாடகமாடியுள்ளார். கடந்த 3 ஆண்டுகளாக அவர் ஏன் ஆய்வு செய்யவில்லை. அமைச்சர்கள், அதிகாரிகள், மேயர் என எவராவது ஆய்வு செய்தார்களா?.

உதய் மின் திட்டத்தில் பல்வேறு வேறு நன்மைகள் இருந்ததால், அதில் அ.தி.மு.க. அரசு கையெழுத்து போட்டது. இதில் எல்லா மாநிலங்களும் கையெழுத்து போட்டுள்ளன. தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு அடியோடு சீர்குலைந்துவிட்டது. கொலை, கொள்ளை, வழிப்பறி, பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்துள்ளன.

தமிழகத்தில், 200 நாள்களில் 595 கொலைகள் நடந்துள்ளன. தமிழகம் கொலை மாநிலமாக மாறிவிட்டது. பொலஸாருக்கு முழு சுதந்திரம் கிடையாது. கொலைகள் பலவும் கஞ்சா போதையில் தான் அதிகமாக நடக்கின்றன. கஞ்சா விற்பனை செய்யாத இடமே கிடையாது என நிலை மாறிவிட்டது. குறிப்பாக, பாடசாலைகள் , கல்லூரிகள் இருக்கும் இடங்களில் அதிகளவில் கஞ்சா விற்பனை அதிகமாக இருக்கிறது.

அனைத்து கல்லூரி பகுதிகளிலும், காவலர்களை நிறுத்தி, கஞ்சா விற்பனையை கண்டுபிடித்து, தடுத்து நிறுத்த வேண்டும். இல்லாவிடில், மாணவர்கள், இளைஞர்கள் சீரழிந்துவிடுவர். அதிமுக-வில் இருந்து போனவர்கள் பற்றி ஏன் மீண்டும் மீண்டும் பேசுகிறீர்கள். ஓபிஎஸ் உள்பட மற்றவர்களுக்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

ஆம்ஸ்ட்ராங்க் கொலையில், என்கவுன்ட்டர் செய்யப்பட்ட ரவுடி, கைது செய்யப்படவில்லை. அவராகவே சரணடைந்தார். கொலைக் குற்றவாளியான அவரை கை விலங்கு போட்டு அழைத்து சென்றிருக்க வேண்டும். இவற்றை ஏன் காவல்துறை பின்பற்றவில்லை. இது பற்றி சட்டத்துறை அமைச்சருக்கு தெரியாதா? அதிமுக ஆட்சிக்கு வந்ததும் இவையெல்லாம் தோண்டி எடுக்கப்படும்."– என்றார்.

அப்போது, உதயநிதியை துணை முதல்வராக நியமிக்கப்பட்டால் அதனை ஆதரிப்பீர்களா? என்ற கேள்விக்கு அவர் பதிலளித்தபோது,

"அதனை எப்படி ஆதரிக்க முடியும். அவர் கருணாநிதியின் பேரன், ஸ்டாலினின் மகன். அவ்வளவு தான். தி.மு.க வில் எத்தனையோ ஆண்டுகளாக உழைத்தவர்கள் இருக்கிறார்கள். அனுபவமிக்க அமைச்சர்கள் பலர் இருக்கின்றனர். அவர்களுக்கு துணை முதல்வர் பதவி தரலாம். ஆனால், அது போன்று எதுவும் நடக்காது. ஏனென்றால் அது குடும்ப கட்சி.

மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினையை அரசு முறையாக பரிசீலித்து, கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். அடுத்து வரவுள்ள உள்ளாட்சித் தேர்தல், சட்டப் பேரவை தேர்தல் ஆகியவற்றில் மேற்கொள்ள வேண்டிய பிரச்சார உத்திகளை, கட்சி நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். அவற்றை வரும் தேர்தல்களில் பின்பற்றுவோம். தி.மு.கவின் 3 ஆண்டுகால ஆட்சியில் மின் கட்டண உயர்வு, குடிநீர் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு, கள்ளச் சாராய மரணம் உள்பட இந்த ஆட்சியின் மக்கள் விரோத செயல்களை மக்களிடம் எடுத்துக்கூறி தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ளப்படும்.

தி.மு.கவின் 3 ஆண்டு கால ஆட்சியில், தமிழகத்துக்கு என்ன திட்டம் கொண்டு வந்தனர். மதுரையில் நூலகம் ஒன்றையும், சென்னையில் மருத்துவமனை ஒன்றையும் கட்டினர். இதை தவிர வேறு எதுவும் செய்யவில்லை. பேருந்துகளில் பெண்களுக்கு கட்டணமில்லா பயணம், மகளிர் உரிமைத் தொகை ஆகியவற்றை கூறுகின்றனர். அவையெல்லாம் திட்டங்கள் அல்ல. அவை, அறிவிப்புகள் மட்டுமே, அதை யார் வேண்டுமானாலும் செய்ய முடியும்." – என்றார்.



# தி.மு.க. சட்டப்பேரவை தேர்தல் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

## மாவட்ட செயலாளர்களிடம் கருத்து கேட்க முடிவு

தி.மு.க. சட்டப்பேரவை தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவின் முதல் கூட்டம் நேற்று மாலை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட செயலாளர்களிடம் இருந்து கருத்துக்களைப் பெற்று, மாவட்டங்கள் பிரிப்பு, புதியவர்கள் நியமனம் ஆகியவற்றை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மக்களவை தேர்தலில் 40 தொகுதிகளிலும் திமுக கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. இந்த தேர்தலில் சட்டப்பேரவை தொகுதிகளில் 221 இல் திமுக அதிக வாக்குகள் பெற்றுள்ளது.

எனவே, எதிர்வரும் 2026 தேர்தலிலும் தனிப்பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சி அமைக்க வேண்டும் என்ற உறுதியுடன் தி.மு.க. உள்ளது. இதையடுத்து, மக்களவை தேர்தல் முடிந்ததுமே, தற்போது சட்டப்பேரவை தேர்தலுக்கான ஒருங்கிணைப்புக் குழுவை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இக்குழுவில், தி.மு.க. முதன்மை செயலாளர் கே.என்.நேரு, அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு மற்றும் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இளைஞரணி செயலாளராக உள்ள அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு, துணை முதல்வர் பதவி விரைவில் வழங்கப்படும் என்று பரவலாக பேச்சு உள்ள நிலையில், தற்போது அடுத்த சட்டப்பேரவை தேர்தலை ஒருங்கிணைக்கும் பணியும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இக்குழுவினர் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றனர். இதையடுத்து, ஒருங்கிணைப்புக் குழுவின் முதல் கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், குழுவின் அடுத்தக்கட்ட பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டன. குறிப்பாக, தொகுதி வாரியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு தொகுதி நிலவரம், எம்.எல்.ஏவின் பணிகள், கட்சியினர் மற்றும் மக்களின் மனநிலை அறிய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, அமைப்பு ரீதியாக மாவட்டங்களின் எண்ணிக்கையை உயர்த்த தி.மு.க. தலைமை திட்டமிட்டுள்ள நிலையில், அதற்கான அடிப்படை பணிகளை இக்குழு மேற்கொள்ள உள்ளது. இதற்காகவும், அடுத்து வரும் தேர்தலில் தொகுதிகள் அடிப்படையில் பிரித்து நிர்வாகிகள் பணியாற்றும் வகையில் மாவட்ட செயலாளர்களை அழைத்து சந்தித்து, அவர்களிடம் கருத்து கேட்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. விரைவில் இப்பணிகள் தொடங்கப்படும் என்று தி.மு.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

# 60,000 சட்டவிரோத புலம்பெயர்ந்தோரை ஏற்றுக்கொள்வதற்கு பிரித்தானியா திட்டம்






புதிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மரின் புதிய குடியேற்றத் திட்டங்களின் கீழ் 60 ஆயிரம் சட்டவிரோத புலம்பெயர்ந்தோரை பிரித்தானிய அரசு அனுமதிக்கவுள்ளதாக அறிக்கையொன்று வெளியாகியுள்ளது.

பிரித்தானியாவின் புதிய அரசாங்கம் எடுத்த முதல் முடிவானது, முந்தைய கன்சர்வேடிவ் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட ருவாண்டா நாடு கடத்தல் திட்டத்தை கைவிடுவதாகும்.

முன்னாள் பிரதமராக இருந்த போரிஸ் ஜான்சன் இயற்றிய இத்திட்டத்தின் கீழ், சட்டவிரோதமாக குடியேறியவர்கள் ஆபிரிக்க நாடான ருவாண்டாவுக்கு அனுப்பப்படுவார்கள், கைவிடப்பட்டதை தொடர்ந்து தொழிற்கட்சி அரசாங்கம் சுமார் 90 ஆயிரம் சட்டவிரோத புலம்பெயர்ந்தோரின் புகலிட விண்ணப்பங்களை விரைவாகக் கண்காணிக்கத் தயாராக உள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இவற்றில் சுமார் 60 ஆயிரம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என கணிக்கப்பட்டுள்ளது.

ரிஷி சுனக்கின் பிரதமர் பதவியின் முடிவில் ருவாண்டா திட்டம் ஒரு பாரிய பிரச்சினையாக மாறியது. எனவே தற்போது, புதிய தொழிற்கட்சி அரசாங்கம் இதற்கு ஒரு தீர்வாக இந்த திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.



# காசா முகாம்கள் மீது இஸ்ரேல் தாக்குதல்!

## ஒரே நாளில் 39 பேர் பலி

பலஸ்தீன நகரமான காசாவின் பல்வேறு இடங்களில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 39 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தாக்குதல் சம்பவமானது நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இஸ்ரேலிய பீரங்கிப் படைகள் ரஃபா நகரின் மேற்கு மற்றும் வடக்கு பகுதிகளை நோக்கி முன்னேறும்போது இந்த தாக்குதல்கள் அரங்கேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது, உள்ளூர் பத்திரிகையாளர் ஒருவரின் குடும்பமும் கொல்லப்பட்டுள்ளதுடன், கடந்த 9 மாதங்களுக்கும் மேலாக இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதலில் உயிரிழந்த பலஸ்தீன பத்திரிகையாளர்களின் எண்ணிக்கை 161 ஆக உயர்ந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்நிலையில், மக்கள் தஞ்சமடைந்திருந்த குடியிருப்பு பகுதியின் மீது நேற்று இரவு இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 10 பேர் உயிரிழந்துள்ளனர் என கூறப்படுகின்றது.

அதேவேளை, அல்- நஸ்ரேத் அகதி முகாமின் மீது நடந்த வான்வழித் தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டதுடன். முன்னதாக மற்றொரு முகாம் மீது நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் 2 பத்திரிகையாளர் உட்பட பலர் படுகாயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, இதுவரை இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 38 ஆயிரத்து 798 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என கூறப்படுகின்றது.

இந்தநிலையில், அமெரிக்காவுடன் கட்டார், எகிப்து உள்ளிட்ட நாடுகளின் முன்முயற்சியில் மேற்கொள்ளப்பட்ட இஸ்ரேல் - ஹமாஸ் போர்நிறுத்த அமைதிப் பேச்சுவார்தைகள் தோல்விமுகத்தில் உள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு இந்த வாரம் சந்திக்க உள்ளார் என குறிப்பிடத்தக்கது.

# ஜனநாயகத்திற்காக நான் தோட்டாவை எதிர்கொண்டேன்; டொனால்ட் ட்ரம்ப்




தான் ஜனநாயகத்திற்கு ஆபத்தானவன் என எதிர்க்கட்சியினர் தொடர்ந்து கூறி வருவது முட்டாள்தனமான கருத்து என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்தில் நேற்று நடைபெற்ற பிரசார பொதுக்கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்துள்ள அவர், ஜனநாயகத்திற்கு எதிராக நான் என்ன செய்தேன்? எனவும் கேள்வியெழுப்பியுள்ளார்.

அத்துடன், கடந்த வாரம் ஜனநாயகத்திற்காக தான் தோட்டாவை எதிர்கொண்டேன் என ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.





# சஜித், அநுரவுக்கு ரணில் அழைப்பு

"அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்க நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. நாட்டின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே அரசியலை உருவாக்க வேண்டும். சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் இந்தப் பயணத்தில் இணைய வேண்டும்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

"ஒன்றாக வெல்வோம் – நாம் கம்பஹா" என்ற தொனிப் பொருளில் நேற்று கடவத்தை பஸ் நிலைய வளாகத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

தற்போதைய அரசின் வேலைத் திட்டம் மற்றும் முன்நோக்கிச் செல்லும் வழிகள் குறித்து மக்களைத் தெளிவுபடுத்தும் வகையில் நடைபெற்ற இந்தப் பொதுக் கூட்டத்தில், கம்பஹா மாவட்டத்தின் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டதுடன் அரசின் வேலைத்திட்டத்திற்கு தமது ஆதரவைத் தெரிவித்த மக்கள், ஜனாதிபதி ரணிலை அமோகமாக வரவேற்றனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை, ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்ற முன்மொழிவை கம்பஹா மாவட்ட மக்கள் சார்பில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க முன்வைத்தார்.

அப்போது, மேடையில் இருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் 26 பேர் உட்பட 250 முன்னாள் உள்ளூராட்சி உறுப்பினர்களும், கூட்டத்தில் பங்கேற்ற 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரும் கைகளை உயர்த்தி ஏகமனதாக அந்த முன்மொழிவு நிறைவேற்றப்பட்டது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில்,

"மக்கள் எனக்கு வழங்கிய அடிப்படையான பொறுப்பை நான் நிறைவேற்றியுள்ளேன். பொருளாதாரமும் அரசும் இல்லாத நாட்டையே பொறுப்பேற்றேன். பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்கக் கூட அரசு அலுவலகம் ஒன்று இருக்கவில்லை. எனக்கு கட்சியும் இருக்கவில்லை. எனது கட்சியில் நான் மட்டுமே நாடாளுமன்றத்தில் இருந்தேன். அதன்படி ஐக்கிய தேசியக் கட்சியினர் என்று நம்பி ஐக்கிய மக்கள் சக்தியிடம் ஒத்துழைப்பு கேட்டேன். ஒத்துழைக்கவில்லை. டலஸ் அழகப்பெருமவுக்கு அவர்கள் ஆதரவளித்தனர்.

மக்கள் விடுதலை முன்னணி பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள விரும்பமில்லாத காரணத்தால், அவர்களும் எனக்கு ஆதரவளிக்க முன்வரவில்லை. பின்னர் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தவிசாளர் ஜீ.எல் பீரிஸிடம் ஒத்துழைப்பு கேட்டேன். அவர் என்னைச் சந்திக்கக் கூட தயாராக இருக்கவில்லை. நான் பேசினேன். அவர் என்னோடு பேசக்கூட தயாராக இருக்கவில்லை. பின்னர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசினேன். அவர் ஒத்துழைப்பு வழங்க இணக்கம் தெரிவித்தார்.

அவ்வாறு ஆரம்பித்த அரசில் நான் ஜனாதிபதியாக இருக்க எனக்கு ஒரு இடமிருக்கவில்லை. ஜனாதிபதி மாளிகையில் ஒன்றுகூடியிருந்த மக்கள் நீச்சல் தடாகத்தில் நீராடிக்கொண்டிருந்தனர். எனது வீடு எரிக்கப்பட்டிருந்தது. அலுவலகமும் முற்றுகையிடப்பட்டிருந்தது. பிரதமர் அலுவலகம் மட்டும் எஞ்சியிருந்ததால் அதன் மேல் மாடியில் நானும், கீழ் மாடியில் பிரதமர் தினேஷ் குணவர்தனவும் பணிகளை ஆரம்பித்தோம்.

அதன் பின்னர்தான் ஐ.எம்.எப். உடன் கலந்துரையாடி அடுத்தகட்ட பணிகளை ஆரம்பித்தோம். அனைவரும் ஒன்றுபட்டே பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை நான் அறிந்துகொண்டேன். அரசியல் செய்து இந்த நாடு சீரழிக்கப்பட்டிருந்தது. இலங்கை பெருமைக்குரிய நாடு. இந்த நாடு இந்த நிலைக்குச் செல்ல வேண்டியது அவசியமா? மகாவம்சத்தில் கூட இந்த நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருந்தாகக் குறிப்பிடப்படவில்லை.

கஷ்டமான தீர்மானங்களை நாம் எடுக்க வேண்டியிருந்தது. நாட்டுக்கு எரிபொருள் கொள்வனவு செய்ய புலம்பெயர் தொழிலாளர்கள் பணம் அனுப்பும் வரையில் காத்திருந்தோம். அமெரிக்காவின் சமந்தா பவரின் உதவியோடு, உலக வங்கியின் உதவியில் உரத்தைப் பெற்றுக்கொடுத்தோம். கஷ்டமான தீர்மானங்களை எடுக்க வேண்டியிருந்தது. அரசின் செலவுகளை குறைத்தோம். பணம் அச்சிட வேண்டாம் என்ற நிபந்தனையை ஐ.எம்.எப். விதித்தது. வங்கிகளிடத்திலிருந்து கடன் பெறவும் வேண்டாமென அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ச்சி▼








# சஜித், அநுரவுக்கு ரணில் அழைப்பு

தொடர்ச்சி▲

சில நிவாரணங்களைத் தவிர்த்து வருமானங்களைத் தேடிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவற்றை செய்திருக்காவிட்டால் நெருக்கடியில் விழுந்திருப்போம். எந்த அளவு கஷ்டங்கள் வந்தாலும் எழுந்து வர முடியும் என்று நம்பினேன். இவ்வாறு முன்னோக்கிச் சென்ற போதும் பல முறை எதிர்கட்சியின் ஒத்துழைப்பை கோரினேன்.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அவர்களின் ஒத்துழைப்பைக் கோரினேன். அவர்கள் ஆதரவு வழங்க முன்வரவில்லை. நான் மக்களின் மேம்பாட்டுக்காகவும் நாட்டின் மேம்பாட்டுக்காவுமே பாடுபடுகின்றேன் என்பதை அறிந்து அனைத்து செயற்பாடுகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஐக்கிய மக்கள் சக்தியும், மக்கள் விடுதலை முன்னணியும் மக்களுக்காக சிறிதும் ஒத்துழைப்பு வழங்க முன்வரவில்லை.

உலக நாடுகளும் எமக்கு உதவ முன்வர கூடாதென அறிவிப்புக்களை வெளியிட்டனர். ஆனால், எமது பயணம் தொடர்ந்தது. எமக்கு கடன் வழங்கும் நாடுகள், ஐ.எம்.எப். அமைப்பு உள்ளிட்ட அனைத்து தரப்புக்களும் இப்போது எம்மோடு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன. இலங்கையை இந்த நிலையிலிருந்து மீட்டெடுக்க முயற்சிக்கின்றோம். இன்னும் சிறிது நாட்களில் இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு விட்டது என்ற அறிவிப்பு வரும். அதன் பின்னர் நம் முன்பிருக்கும் பல தடைகள் நீங்கிவிடும்.

இந்நாட்டின் எதிர்காலத்தை அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக கட்டமைக்க இடமளியேன். நாட்டின் தேவைக்கேற்ப அரசியல்வாதிகள் இசைந்துச் செல்ல வேண்டும். இல்லாவிட்டால் நாட்டின் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடும். சிங்களவர்கள் என்று கூறிக்கொண்டு யாசகம் செய்வதில் பயனில்லை. பெருமிதம் உள்ள மனிதர்கள் என்றால் முன்னேறிச் செல்ல வேண்டும். அதற்கான மாற்றத்தைச் செய்வோம்.

போலி வாக்குறுதிகளை வழங்குவதில் பயனில்லை. அதனால் சஜித், அநுரவை எம்மோடு இணைந்து முன்னோக்கிச் செல்ல வருமாறு அழைக்கின்றேன்."– என்றார்.

# சஜித்தின் பெரு வெற்றியை 'றோ'வும் உறுதிப்படுத்தியது

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



"ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவே பெரும் வெற்றி பெறுவார் என இந்திய உளவுப் பிரிவான றோ அமைப்பு கூட தெரிவித்துள்ளது எனத் தகவல் கிடைத்துள்ளது."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறிய தாவது:–

"ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் இணையவுள்ளனர் என்ற தகவல் ஐக்கிய தேசியக் கட்சியினரால் தொடர்ச்சியாகப் பரப்பப்பட்டு வருகின்றது. ஆனால், அது போலியான தகவல் என்பது உறுதியாகியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் ஜனாதிபதி ரணில் பக்கம் வராவிட்டால் அவருக்கு மொட்டுக் கட்சியின் ஆதரவு கிட்டாது. அதனால்தான் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் இன்று வருவார்கள், நாளை வருவார்கள் என்றெல்லாம் கூறப்பட்டு வருகின்றது.

கட்சிகளை உடைத்து குழப்பத்தை ஏற்படுத்துவது ரணிலுக்கு கைவந்த கலை. அதனால்தான் எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்குக் கூட நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எமது கட்சியில் இருந்து எவரும் செல்லவில்லை. சிலர் சென்றால்கூட அது சலுகைக்கான தாவலாகவே இருக்கும்.

தற்போதைய சூழ்நிலையில் ரணில் விக்கிரமசிங்க மூன்றாவது இடத்திலேயே உள்ளார். மொட்டுக் கட்சியின் ஆதரவு கிட்டாவிட்டால் நான்காவது இடத்துக்குத் தள்ளப்படுவார். இதனால் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவாரா என்பது சந்தேகமே.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலை ஜனாதிபதி ரணில் நடத்தமாட்டார் என நம்புகின்றோம். அவ்வாறு நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்தினால்கூட ஜனாதிபதித் தேர்தல் உரிய காலப்பகுதியில் நடத்தப்பட்டாக வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவே பெரும் வெற்றி பெறுவார். றோ அமைப்புகூட இதனைத் தெரிவித்துள்ளது." – என்றார்.

# ‘யாழ்ப்பாணம் எக்ஸ்போ 2024’ யாழ். முற்றவெளி மைதானத்தில்

## ஓகஸ்ட் 23ஆம் திகதி முதல் 25ஆம் வரையில்




யாழ்ப்பாணத் தொழில் துறைகளை பிரபல்யப்படுத்தி மேம்படுத்தும் நோக்குடன், ‘யாழ்ப்பாணம் எக்ஸ்போ 2024’ எனும் வர்த்தக கண்காட்சி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

முற்றவெளி மைதானத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி முதல் 25ஆம் வரையில் இது நடைபெற உள்ளது.

இக் கண்காட்சியினை முற்றிலும் இலவசமாக பார்வையிட முடியும். முதல் நாள் நிகழ்வில் யாழ். இந்திய துணை வேந்தர், வடமாகாண ஆளுநர் ஆகியோர் பிரதம அதிதியாக கலந்து கொள்வார்கள். இரண்டாம் நாள் கடற்தொழில் அமைச்சர் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

கண்காட்சி தொடர்பில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே ஏற்பாட்டாளர்கள் அதனை அறிவித்துள்ளனர்.

கண்காட்சி தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

கட்டுமானம் மற்றும் பிற தொழில் துறைகளில் பங்காளர்களுக்கு தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்த ஒரு தளத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பை அளிக்கும் நோக்கில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

200க்கும் மேற்பட்ட காட்சி கூடங்களுடன் பல்வேறு நிபுணர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள், கட்டுமானம் மற்றும் பிற தொழில்களை இணைந்து மேம்படுத்துவதற்காக ஒருங்கிணைக்கப்படுகின்றனர்.

அதே சமயம் சிறு தொழல் முயற்சியாளர்களின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை பிரபலப்படுத்தவும் இது உதவும்.

வடக்கு மற்றும் தெற்கு வர்த்தக இணைப்புகளை வலுப்படுத்தும் இந்த கண்காட்சியில் கட்டுமானம் சார் இயந்திரங்கள், உபகரணங்கள், விவசாயம் சார் உபகரணங்கள், மின் உபகரணங்கள், கைவினைப் பொருள்கள், செராமிக் மற்றும் கண்ணாடிப் பொருள்கள், வீட்டு உபயோகப் பொருள்கள், சுகாதாரம், உணவு மற்றும் உடைகள் போன்ற பல துறைகளில் உள்ள தயாரிப்புகள் மற்றும் சேவைகளை காட்சிப்படுத்தவுள் ளன.

இக் கண்காட்சியில், பொருள்கள் சேவைகளை பெற்றுக்கொள்வோருக்கு 40 வீதம் வரையில் விலைக்கழிவுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

வடக்கினை சேர்ந்த தொழில் முயற்சியாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் காட்சிக்கூடங்களை வழங்கவுள்ளோம்.

கண்காட்சி நடைபெறும் நாள்களில் களியாட்ட நிகழ்வுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.





# கீரி சம்பா உற்பத்தியை விஸ்தரிக்க நடவடிக்கை

பெரும்போகத்தில் நாடளாவிய ரீதியில் கீரி சம்பா உற்பத்தியை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த பெரும்போகத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 2000 ஏக்கரில் கீரி சம்பா செய்கையை மேற்கொள்ளவுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற சம்பா உற்பத்தி அறுவடை நிகழ்ச்சியின் போதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

சந்தையில் ஏனைய அரிசிகளின் விலை குறைந்து காணப்படும் போதும் கீரி சம்பா அரிசியின் விலை அதிகரித்திருப்பதனால் விதை நெல் உற்பத்தியை அதிகரிப்பதே இவ்வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.



# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு நேரில் சென்று அமைச்சர் டக்ளஸும் அதிகாரிகளும் நேற்று ஆராய்வு!

(த.சுபேசன்)

அண்மைய நாள்களில் சர்ச்சைகளில் சிக்கிக்கொண்ட சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விஜயம் ஒன்றை மேற்கொண்டார். சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

இதன்போது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நிர்வாகம் தொடர்பாக கடந்த காலங்களில் மக்களால் முன் வைத்த 16குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அமைச்சர் ஆராய்ந்தார்.

குறிப்பாக வைத்தியர்கள் கடமை நேரத்தில் இல்லாமை, சட்ட வைத்திய அதிகாரி மீதான குற்றச்சாட்டுக்கள், விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு இயக்காமைக்கான காரணங்கள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டறிந்திருந்தார். இதன்போது பெரும்பாலான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்திருந்தார்.

குறிப்பாக பொதுமக்கள் பலரும் வைத்தியர் அர்ச்சுனா மீளவும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு பணிப்பாளராக வர சந்தர்ப்பம் உள்ளதா என அமைச்சரிடம் கேள்வி எழுப்பியிருந்தனர். இது தொடர்பாக சுகாதார அமைச்சர் மற்றும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய பின்னர் முடிவுகளைத் தெரியப்படுத்துவார் என அமைச்சர் பதிலளித்திருந்தார்.




மேற்படி கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பத்திரன. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ரஜீவ், வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவினர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மேற்படி விஜயத்தின் போது அமைச்சர் வைத்தியசாலையின் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு ,வெளிநோயாளர் பிரிவு, மகப்பேற்று விடுதி, தற்காலிக மின்பிறப்பாக்கி ஆகியவற்றையும் பார்வையிட்டு அவை தொடர்பாக குறை-நிறைகளை கேட்டறிந்திருந்தார்.







# ஜிந்துபிட்டியில் தெய்வீகத் திருவுரை

கொழும்பு, ஜெயந்திநகர் ஜிந்துபிட்டி ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோயில் ஆடிவேல் விழாவை முன்னிட்டு கடந்த சனிக் கிழமை மாலை தமிழகத்தின் பிரபல ஆன்மீக சொற் பொழிவாளர் திருமுருகவள்ளல் கிருபானந் தவாரியார் சுவா மிகளின் மாணவி 'கலைமாமணி',' வாகீசகலாநிதி திருமதி. தேச மங்கையர்க்கரசி அவர்கள் உரையாற்றுகின்றமையையும் அவருக்கான கௌரவத்தை ஆலய நிர்வாகிகள் வழங்கு வதையும் கலந்துகொண்ட மண்டபம் நிறைந்த கூட்டத்தையும. படங்களில் காண லாம்.



















# கொழும்பு அளுத்மாவத்த ஆனந்த ஐயப்பன் தேவஸ்தானம் 21ஆம் ஆண்டு வருஷாபிஷேக தீர்த்தவாரி தேர்த்திருவிழா

கொழும்பு அளுத்மாவத்த அகில இலங்கை ஆனந்த ஐயப்பன் தேவஸ்தான 21ஆம் ஆண்டு வருஷாபிஷேக தீர்த்த வாரி ஆராட்டு, தேர்த்திருவிழா நேற்றுக்காலை ஆலய அறங்காவலர் ராயூ சிவராம் தலைமையில் நடைபெற்றது. ஜெயகிருஷ்ணன் பத்தத்திரியின் கிரிகைகளை அடுத்து ஐயப்பன் தீர்த்தக் கேணியில் தீர்த்தம் ஆடுவதையும் தொடர்ந்து தேரில் அமர்ந்து பத்தர்களுடன் புறப்பட்டுச் செல்வதையும் காணலாம்.












(படங்கள் :- எஸ். எம். சுரேந்திரன்)




(படங்கள் :- எஸ். எம். சுரேந்திரன்)

# சீரடி சாயி மத்திய நிலையத்தில் குரு பூர்ணிமா தினம்

கொழும்பு புதுச்செட்டித்தெரு சீரடி சாயி மத்திய நிலையத்தில் குரு பூர்ணிமா தினத்தை முன்னிட்டு நேற்றுக் காலை தலைவர் எஸ். என். உதயநாயகம் தலைமையில் நடைபெற்ற விஷேட பஜனை நிகழ்வையும், ஆராத்தி நிகழ்வையும் கலந்து கொண்ட பக்தர்களையும் படங்களில் காணலாம்.

















# ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பரின் ‘அந்த கல்முனைக்குடி நாட்கள்’ நூல் வெளியீடு

(அஷ்ரப் ஏ சமத்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் எழுதிய ‘அந்த கல்முனைக்குடி நாட்கள்’ எனும் கவிதைத் தொகுப்பு நூலின் வெளியீட்டு வைபவம் நேற்று ஞயிற்றுக்கிழமை 20ஆம் திகதி மாலை பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்றது.

இந் நிகழ்வுக்கு அதிதியாக உயர் நீதிமன்ற நீதியரசர் திலிப் நவாஸ் கலந்து கொண்டார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம், தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித் துறை பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ், கல்முனை கவிஞர் , சோலைக்கிளி அத்தீக், முன்னாள் வெளிநாட்டுத் துாது வர் எச்.ஏ அஸீஸ் மற்றும் நூலாசிரியர் நிசாம் காரியப்பர் ஆகியோர் நிகழ்வில் உரையாற்றினார்கள்.

நூலின் முதல் பிரதியை நூலாசிரிய ரால் தனது தாய்க்கு வழங்கி வைத்தார். அத்துடன் சகலருக்கும் இலவசமாக நூல்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இங்கு உரையாற்றிய ரவூப் ஹக்கீம் எம்.பி. –

நிஸான் காரியப்பர் சிங்கள மொழி மூலம் கல்வி கற்று தனது தொழில் துறையை ஆங்கிலத்தில் செயலாற்றும் ஒருவர். அதுவும் தமிழ் மொழி மூலம் அவர் கவிதையாற்றியிருக்கின்றமை மிகப்பெரிய சாதனையாகும். எனக்குக் கூட சிங்களம் பேசினாலும் அதில் கவிதை எழுதுவது என்பது முடியாத காரியமாகும். மறைந்த தலைவர் எம். எச்.எம். அஷ்ரப்பின் பாசறையில் வளர்ந்தவர் நிஸாம் காரியப்பர் தலை வரின் மருகளையே திருமணம் முடித் துள்ளார். அவரின் கவிதைக்கு அவரது மனைவியின் உதவி கட்டாயம் கிட்டியி ருக்க வேண்டும். – எனக் கூறினார்.

வெளிநாட்டு இராஜதந்திரி எச்.ஏ. அஸீஸ் அங்கு உரையாற்றுகையில் –

தமிழ் இலக்கிய பரப்பில் நிஸாம் காரியப்பர் எழுதிய கவிதைகள் ஒரு தொகுப்பாக வெளிவருவது வரவேற்கத் தக்கதாகும். இத்தொகுப்பு பல ஆண்டு களாக அவர் உள்ளத்தில் ஊற்றெடுத்து ஐம்பதுக்கும் மேற்பட்ட காத்திரமான கவிதைகளை உள்ளடக்குகின்றது. நிஸாம் இந்த நாட்டில் பேசப்படும் மூன்று மொழிகளும் நன்கு தெரிந்தவர் அவரது தாய் மொழியாக தமிழ், பாட சாலைக் கல்வி மொழியாக சிங்களம், தொழில் வாண்மை மற்றும் சமூகங்க ளுக்கிடையிலான பரிமாற்ற மொழியாக ஆங்கிலமும் அமைந்துள்ளன. – என்றார்.

பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் உரையாற்றுகையில் –

நிஸாம் காரியப்பர் கவிதைகள் எனப் பேசத்தக்க தேர்ந்த கவிதைகள் இத்தொகுதியில் உள்ளன. இந்தக் கவி தைகள் தனித்துவ மொழி ஆளுமை யுடன் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவர் ஆரம்பக்கல்வியை பாடசாலைக் கல்வியும் சிங்களமொழியின் படித்த ஒருவர் தாய்மொழியில் இத்துணை சாரமிக்க கவிதைகள் தனித்து மொழி ஆளுமையுடன் பதிவது சிறப்புமிக்கது. – என்றார்.











# சுயநிர்ணய உரிமை வலியுறுத்தியே பொது வேட்பாளரை நிறுத்துகிறோம்

## கட்சி மாநாட்டில் விக்கி அறிவிப்பு

தமிழர்களின் சுயநிர்ணய உரிமை என்ற கருத்தையே தமிழ்ப் பொது வேட்பாளர் தமிழ்ப்பேசும் மக்களிடையே முன்னிறுத்த இருக்கின்றார் என தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் நேற்றுத் தெரிவித்தார்.

நேற்றுத் தமது கட்சியின் தேசிய மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். தமது தலைமை யுரையில் அவர் மேலும் கூறியிருப் பதாவது:-

நாம் எமது தேசிய மகாநாட்டை நடத்த வேண்டும் என்று முடிவெடுத்த போது சம்பந்தன் உயிருடன் இருந்தார். இன்று அவர் இல்லையே என்ற மனோநிலை.

எது, எவ்வாறிருப்பினும் அரசியலில் விருப்பமில்லாத என்னை அரசிய லுக்குக் கொண்டு வந்தவர் சம்பந்தனே. அவர் செய்த செயலால் இன்று நீதித் துறை, நிறைவேற்றுத்துறை, சட்டவாக் கத்துறை மூன்றிலும் அங்கம் வகித்த ஒருவர் என்ற பெருமை என்னைத் தேடி வந்துள்ளது. அவரை இத் தருணத்தில் நினைவு கூருவது சாலப் பொருந்தும் என்று நினைக்கின்றேன்.

அவரைப் போலவே இன்று இங்கி ருக்கும் பலர் இனிவருங்காலங்களில் எம்மைவிட்டுப் பிரிந்துவிடக் கூடும். ஆனால் நாங்கள் பாடுபட்டு உருவாக் கிய இந்தக் கட்சி தொடர்ந்திருந்து மக்கள் பணியாற்ற வேண்டும் என்று மனமாரப் பிரார்த்திக்கின்றேன். வாழ்த் துகின்றேன்.

நான் வடமாகாண முதலமைச்சராக இருந்து பதவிக்காலம் முடிவடையுந் தறுவாயில் இருந்த போது என்னை விடைபெற்று செல்லவிடாது நான் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்து மக்களுக்கு தொடர்ந்து சேவை யாற்றுவதற்கு ஆவன செய்யும் வகை யில் எமது இந்தக் கட்சியை உருவாக் குவதற்கு என்னுடன் தோளோடு தோள் நின்று பல்வேறு உதவிகளையும் எனக்களித்த, தொடர்ந்தும் எனக்கு அளித்துவரும் எனது வெளிநாட்டு, உள்நாட்டு நண்பர்களுக்கு எனது மனப்பூர்வமான ஆழ்ந்த நன்றியறி தல்களை நான் இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அவர்களின் உதவி கிடைத்திராவிட்டால் நான் இன்று ஓய்வில் இருந்திருப்பேன். அவர்களின் பெயர்களை எடுத்துச் சொல்ல ஆசை. ஆனால் பல்வேறு காரணங்களுக்காக அவற்றைக் கூறுவ தைத் தவிர்த்துக் கொள்கின்றேன். அவர்கள் பெயரையும் புகழையும் எதிர்பார்த்து இவ்வாறு செய்யவில்லை. அவர்களின் ஒரே குறிக்கோள் தமிழ்



மக்களின் சுபீட்சமான வருங்காலம். அவர்களைப் போன்றவர்களே தமிழ் மக்களைத் தாங்கிப் பிடிக்கும் அத்தி வாரத் தூண்கள்!

பொங்கு பானையுடன் தொடங்கி, மீனை சிறிது காலம் அரவணைத்து, இன்று மானுடன் சார்ந்து நிற்கின்றோம்.

இந்தக் கட்சியைத் தொடங்கியது எமது இளைஞர், யுவதிகள், பெண்கள் என்று தற்போது போதுமான பிரதி நித்துவத்தைப் பெறாத எம் சமுதா யத்தின் அங்கங்களை பலத்துடன் பயணிக்கச் செய்யவே ஆகும். சம்பந் தன் போல் நானும் விரைவில் என்னைப் படைத்தவனை நோக்கிப் பயணிக்க வேண்டியிருக்கும். ஆனால் மக்களி டையே இளமையுடன் அறிவையும் ஆற்றலையும் பெற்ற நீங்கள் இந்தக் கட்சியை மக்கள் சேவைக்காக மலரச் செய்ய வேண்டும். அதன் நறுமணம் தமிழ்ப் பேசும் மக்கள் அனைவரையும் கவர வேண்டும். கட்சி எமக்கென்ன செய்யும் என்ற மனோநிலை மாறி நாம் கட்சிக்கு என்ன செய்யலாம் என்று இளைஞர், யுவதிகள் மற்றும் பெண்கள் சிந்திக்கும் காலம் பிறக்க வேண்டும்.

2018ல் பிறந்த எமது கட்சி குறுகிய காலத்திற்குள் பதிவு பெற்றமை நற் பேறான சூழ்நிலைகளின் நிமித்தமே. எமக்குப் பதிவு கிடைக்கக் கூடாதென்று கங்கணம் கட்டிக் கொண்டு தேர்தல் ஆணைக்குழுவில் ஒருவர் இருந்தார் என்பது அண்மையில் அந்த நபர் எழுதிய ஒரு கட்டுரையில் இருந்து தான் நான் அறிந்து கொண்டேன். அவ்வாறா னவர்கள் இருந்தும் கூட எமக்கு பதிவு கிடைத்தமைக்கு இறையருளையும் நற்பேறான சூழ்நிலைகளையுமே கார ணம் கூற வேண்டும்.

இன்று பதிவு பெற்றிருக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளுள் நாமும் ஒரு கட்சி. இந்தக் கட்சியின் முதலாவது தேசிய மகாநாட்டை வைக்க வேண்டும் என்று நாம் கருத்துப் பரிமாற்றங்களில் ஈடுபட்ட போது தான் கொரோனா நோய்த்தொற்று வந்து எம்மை நிலை குலையச் செய்தது. நிலை குலைந்த நிலையில் கட்சி உறுப்பினரின் கட்சிவழி செயற்பாடுக ளும் ஸ்தம்பித்துவிட்டன. அடுத்து உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப் போவதாக அறிவித்த போது எமது கட்சி நடவடிக்கைகள் இயக்கிவிட்ட பம்பரம் போல் மீட்சி பெற்று சுறுசுறுப்பாக நடக்கத் தொடங்கியது. அந் நடவடிக் கைகள் கூட இன்று ஸ்தம்பித்துவிட்டன. எமது வைப்புப் பணத்தை திரும்பவும் பெற முடியவுமில்லை. தேர்தல் நடத்தும் வாய்ப்பும் கிட்டவில்லை.

இந்த வருடம் எமது தேசிய மகா நாட்டை வைத்தாலென்ன என்று ஆராய்ந்த போது தான் ஜனாதிபதித் தேர்தல் பற்றிய அறிக்கை வெளிவந்தது.

இன்று அந்தத் தேர்தல் பற்றிய நடவடிக்கைகள் வடகிழக்குத் தமிழ் மக்கள் ஒரு பொது வேட்பாளரை குறித்த தேர்தலில் முன்நிறுத்த வேண்டும் என்ற நிலைக்கு எம்மைக் கூட்டி வந்துள்ளன.

இன்று மேடையில் காட்சி தரும் பெரும் மதிப்பிற்குரிய இருவரும் குறித்த பொது வேட்பாளர் பற்றிய தமது கருத்துக்களை வெளிப்படையாகவே கூறிவந்துள்ளனர். அதுவும் எமது பிரதம அதிதி தமது கட்சியில் முரண் கருத்துக்கள் நிலவி வருகின்ற போதும் பொது வேட்பாளருக்கான அவரின் ஆதரவு நிலையை வெளிப்படையாகவே வெளிக்கொண்டு வந்துள்ளார். மற்றை யவரான பேராசிரியர் அவர்கள் குறித்த பொது வேட்பாளர் பற்றிய கலந்து றவாடல்களில் மிக முக்கிய பாத்திரம் வகித்து வருகின்றார். தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த அயராது அவர் உழைத்து வருகின்றார். இருவரையும் மனம் உவந்து வரவேற்கின்றோம்.

ஒஸ்லோ தீர்மானம், சிங்கள வாக் காளரிடையே வளரக்கூடிய வெறுப்பு நிலை என்றெல்லாம் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தவர்கள் தற்பொழுது போதிய அளவு ஆதரவு வாக்குகளைப் பொது வேட்பாளர் பெறாவிட்டால் என்ன நடக்கும் என்று கேள்வி எழுப்பி வரு கின்றார்கள். தேர்தல் போட்டி ஒன்றில் ஆர்வத்துடன் ஈடுபடுபவர் 'நான் கட்டாயம் தோற்கப் போகின்றேன்' என்ற மனோநிலையுடன் போட்டியிடுவ தில்லை. 'மக்களை என் பக்கம் திருப்ப முடியும் அவர்களின் வாக்குகளைப் பெற முடியும்' என்று எண்ணியே தேர்தலில் நிற்கின்றார். இவ்வாறான முரண்நிலைகளில் நின்று கருத்து ரைப்பவர்கள் தாமும் சேர்ந்து பொது வேட்பாளருக்கு ஆதரவைத் தெரிவித் தால் என்ன நடக்கும் என்று சிந்திப்ப தில்லை. முரண்நிலைகளில் நிற்கும் எமது சகோதர சகோதரிகள் யாவரும் எமது தமிழ் உறவுகளே. ஆகவே நாம் யாவரும் தமிழர்களாக எமது வருங் காலம் பற்றி சிந்திப்பது அவசியமாகும்.

முரண்நிலைகளில் நின்று அடம் பிடிப்பது தமிழர்களின் பிறவிக்குணம்.

தொடர்ச்சி▼

# சுயநிர்ணய உரிமை...

தொடர்ச்சி▲

தான் மற்றவரிலும் பார்க்கக் கெட்டிக்காரன் என்று உலகிற்கு எடுத்தியம்ப வேண்டும் என்ற ஏக்கமே இவ்வாறான நடத்தைக்குக் காரணமோ நான் அறியேன். ஒரு வேளை நாம் எம் பிள்ளைகளை இளவயதிலேயே மட்டந்தட்ட விழைவதால் இவ்வாறன ஏக்கம் அவர்களிடையே ஏற்பட்டுள்ளதோ தெரியவில்லை.

எது எவ்வாறு இருப்பினும் நாம் யாவரும் தமிழர்களாக சிந்தித்தால் எமது வாரிசுகளின் வருங்காலம் பற்றிய கரிசனை எம்மை கட்டாயமாக ஆட்கொள்ளும். 'நாங்கள் இன்று சொகுசாக வாழ்ந்துவிட்டுப் போவோம், நாளை எமது பிள்ளைகளுக்கும், தமிழ் மக்களுக்கும் என்ன நடந்தால் எமக்கென்ன' என்று சிந்திப்பவர்கள் தான் பல பிழையான கருத்துக்களை தமிழ் மக்களிடையே விதைத்து வருகின்றார்கள். அதுவும் கொழும்பில் எனது தமிழ் நண்பர்களின் சிந்தனை பொதுவாக ஒரேவாறாகச் செல்வதை நான் காண்கின்றேன். அவர்கள் என்னிடம் கேட்டதுண்டு – 'நாங்கள் யாவரும் இலங்கையர்கள் தானே? ஏன் நாங்கள் தமிழர்களாகச் சிந்திக்க வேண்டும்?' என்று.

அவர்களுக்கு நான் கூறும் பதில் ஒன்று தான். 'நாம் ஒரு நாட்டு மக்கள் என்பதில் எந்தவித முரண் கருத்துக்கும் இடமில்லை. ஆனால் வடகிழக்கு மாகாண தமிழ் மக்கள் வெறும் சிறுபான்மையினர் அல்லர். அவர்கள் வடகிழக்கின் பெரும்பான்மையினர். ஆகவே எமக்கான தனித்துவத்தை பெரும்பான்மையினர் ஏற்காது இவ்வாறு கூறினால் 'நீங்கள் எங்களுடன் சேருங்கள். எங்களுடன் ஐக்கியமாகிவிடுங்கள்' என்பது தான் அதன் அர்த்தம். அதாவது எமது தனித்துவத்தை நாங்கள் மறந்துவிட வேண்டும். கூடிய விரைவில் இந்நாட்டு மக்கள் யாவரும் சிங்கள பௌத்தர்களாக மாற வேண்டும் என்பதே அதன் உள்ளர்த்தம். ஆங்கில மொழிப் பிணைப்பால் நாங்கள் வேற்றுமையில் ஒற்றுமை கண்டோம். ஆனால் இன்று சிங்களமொழி மூலம் ஒற்றுமை தேடுபவர்கள் எம்மை ஆட்கொண்டு ஆள வேண்டும் என்ற எண்ணத்திலேயேசெயலாற்றுகின்றனர்' என்று கூறுவேன்.

உண்மையான ஒற்றுமை என்பது மற்றவர்களின் உரிமைகளை அவர்களுக்கு கையளித்து இருதரப்பாரும் சமமான ஒரு நிலையில் நின்று கைகோர்த்து செல்லுதலே. எம்மைக் கிணற்றின் அடியில் வைத்துக் கொண்டு கிணற்றுக்கு வெளியில் நின்று ஒற்றுமை பேசுபவர்கள் ஒற்றுமை என்பதின் அர்த்தம் புரியாதவர்கள்.

வடகிழக்கு மக்களாகிய நாம் மூவாயிரம் ஆண்டுகால தொடர் வரலாற்றைக் கொண்டவர்கள். எமக்கென ஒரு மொழியுண்டு. வாழ்முறையுண்டு. வாழ் நிலங்கள் உண்டு. கலை கலாச்சாரம் உண்டு. பண்பாடு உண்டு. சிங்கள மக்கள் இவற்றை ஏற்று எமக்கான அரசியல் அதிகாரங்களை வழங்கி எம்முடன் ஒன்றிணைந்து சென்றால் தான் அது ஒற்றுமை. இல்லை என்றால் அது ஆக்கிரமிப்பு.

இந் நாட்டில் எமது சிங்கள வேட்பாளருக்குத் தமிழ் மக்கள் வாக்களித்தால் அது ஒற்றுமையாகாது. அது சிறுபான்மையினரின் பயத்தின் அறிகுறி. 'எமக்கு என்ன நடக்குமோ என்ற பீதியில் தான் நாங்கள் உங்களுக்கு வாக்களித்தோம்' என்று கூறாமல் எம்மவர் 'நாம் எல்லோரும் ஒரு நாட்டு மக்களே அதனால்தான் உங்களுக்கு நாம் வாக்களித்தோம்' என்று கூறத் தலைப்படுகின்றார்கள். அது தவறான வழிமுறை. தவறான கூற்று. அவ்வாறு சிந்தித்து நடந்து கொண்டால் எமது தனித்துவம் பறிபோய்விடும். எமது காணிகளும் வளங்களும் சூறையாடப் பட்டுவிடுவன. எமது தொழில்கள், கைத்தொழில்கள் போன்ற பலவற்றிலும் இருந்து எம்மைப் பெரும்பான்மையினர் வெளியேற்றிவிடுவார்கள். வெளிநாடுகளுக்கு செல்வதே எமக்கிருக்கும் ஒரே தேர்வாக வந்துவிடும். பலருக்கு இன்று வெளிநாடு செல்வதே ஒரேயொரு தேர்வாகப் படுகின்றது. படித்த பல் தொழில் விற்பன்னர்கள் கூட எம்மைவிட்டு வெளிநாடு போகவே விருப்பப்படுகின்றார்கள். எமது ஜனத்தொகை வெகுவாக குறைந்து வருகின்றது.

இவற்றை எல்லாம் சிந்தித்துத் தான் எமது வருங்கால சந்ததியினர் தமிழ்ப் பேசும் மக்களாக மாண்புடன் வாழவழி வகுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நாங்கள் தமிழ் பொது வேட்பாளர் வேண்டும் என்ற கருத்தை முன்னிறுத்தியுள்ளோம்.

நாம் ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல வேண்டும் என்று போட்டியிடவில்லை. எமது தனித்துவத்தை உலகறியச் செய்யவும் எமது ஜனநாயக உரித்தை ஐக்கிய நாடுகள் மூலம் பரீட்சித்துப் பார்க்க ஒரு வேண்டுதல் மேடையாக இத் தேர்தலைப் பாவிக்கவுமே நாம் ஒரு தமிழ் பொது வேட்பாளரை முன்னிறுத்த உத்தேசித்துள்ளோம்.

நாங்கள் பொது வேட்பாளரை நிறுத்த இருக்கின்றோம் என்றவுடன் மூன்று முக்கிய சிங்கள வேட்பாளர்களும் தமது சேனை பரிவாரங்களுடனும் படைகளுடனும் இங்கு வந்து 13ஐத் தருகின்றோம் என்று சொல்லிச் சென்றுள்ளார்கள். 13வது திருத்தம் 1987ம் ஆண்டு தொடக்கம் அரசியல் யாப்பில் இருந்து வருகின்றது. அதனை 2018 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப் படுத்தாது விட்டுவிட்டு 2024ல் வந்து நடைமுறைப்படுத்துவோம் என்று கூறினால் அதன் அர்த்தம் என்ன? 13 வேண்டாம் ஆனால் தமிழ்ப் பேசும் மக்களின் வாக்கு வேண்டும் என்பதே அதன் அர்த்தம். தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக வலிந்து வந்து 13 பற்றிக் கூறிச் சென்றுள்ளார்கள் சிங்களத் தலைவர்கள். போட்டி முடிந்ததும் 13 வேண்டாம் என்பார்கள். 'நாம் யாவரும் ஒரு நாட்டு மக்களே எங்களுடன் சேருங்கள்' என்றெல்லாம் கூறுவார்கள்.

பறிபோன அதிகாரங்களைத் திரும்ப மாகாணசபைகளுக்குக் கையளிக்க உதவுவேன் என்று எனக்குச் சொன்ன தற்போதைய ஜனாதிபதி கடைசி நேரத்தில் அந்த நடவடிக்கையில் இருந்து பின்வாங்கிவிட்டார். ஆகவே இவர்கள் தருவதாகக் கூறுவார்கள். தரமாட்டார்கள். தரவிடமாட்டார்கள் பௌத்த பிக்குமாரும் மற்றையோரும். அதை நாங்கள் யாவரும் புரிந்து கொள்ள வேண்டும். இவர்களுடன் பேரம் பேசிப் பயனில்லை. ஏனென்றால் 13 பற்றியே அவர்கள் பேசுவார்கள். ஒற்றையாட்சியை மாற்றுவதற்கு எவரும் முன்வரமாட்டார்கள். எம்முடைய இன்றைய அவலம் ஒற்றையாட்சி அரசியல் யாப்பு மூலம் வந்ததே என்பதை எமது தமிழ் மக்கள் ஆழ உணர வேண்டும். எமது தனித்துவத்தை ஏற்கும் ஒரு அரசியல் யாப்பு உதயமாக வேண்டும்.

தமிழ்ப்பேசும் மக்கள் வேண்டுவது ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் கீழான 13வது திருத்தச் சட்டத்தை அல்ல. எமக்கு சர்வதேசச் சட்டத்தின் கீழ் தரப்பட்டிருக்கும் சுயநிர்ணய உரிமையையே நாங்கள் கேட்கின்றோம். தமிழ்ப் பொது வேட்பாளர் இந்தக் கருத்தையே தமிழ்ப் பேசும் மக்களிடையே முன்னிறுத்த இருக்கின்றார். வடகிழக்கில் ஐக்கிய நாடுகள் மக்கள் தீர்ப்பைக் கோரி தேர்தல் நடத்தட்டும். தமிழ்ப்பேசும் மக்கள் எதனைக் கோருகின்றார்களோ அதனை வழங்க ஐக்கிய நாடுகள் முன்வரவேண்டும் என்ற கருத்தை சர்வதேசத்தின் முன் முன்னிலைப்படுத்தவே தமிழ் பொது வேட்பாளர் காத்து நிற்கின்றார். 13ஐத் தருவதால் எமது மக்களுக்கு விடிவு காலம் ஏற்படாது. ஏற்கனவே 13ன் கீழுள்ள பல அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்தினால் எம்மிடம் இருந்து பறித்தெடுக்கப்பட்டுள்ளன. இப்போது இருப்பது வெறும் கோதே! மேல்த்தோலே! அதிலும், தரப்பட்டிருக்கும் மிக சொற்ப பொலிஸ் அதிகாரங்களைக்கூட வழங்க முடியாது என்று ஒரு வேட்பாளர் கூறியுள்ளார்.

ஆகவே எங்களுடைய கட்சியின் இந்த தேசிய மகாநாட்டில் நாங்கள் யாவரும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எங்களின் வாக்குகளை அளிப்போம் என்று உறுதி பூணுவோமாக! இது பற்றிய தீர்மானம் இன்று சமர்ப்பிக்கப்பட இருக்கின்றது. எமது அரசியல் குறிக்கோள்களைப் பிரதிபலிக்கும் தீர்மானங்களும் இன்று சமர்ப்பிக்கப்படுகின்றன. அவற்றை எம்மவர் ஒரு மனதாக இன்று ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகின்றேன். உங்கள் யாவருக்கும் மீண்டும் என் நன்றியறிதல்களை வெளிப்படுத்தி எனது உரையை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன். – என்றார்.



# விக்கியின் மாநாட்டில் சிறிதரன் தமிழரசினருக்குத் தரும் செய்தி

எதிரிக்கு எதிரி நண்பன். இப்படித்தான் இன்று தமிழரசு அரசியல் நகர்கிறதா என்ற கேள்வி எழுவது தவிர்க்கப்பட முடியாததாகிறது.

இன்று விக்னேஸ்வரனின் கட்சியினது மாநாடு நடைபெறுகிறது. இவ்வளவுகாலமும் ஓர் அமைப்பாக அந்தக் கட்சி செயற்பட்டதில்லை. சர்வமும் சகலதும் விக்னேஸ்வரன் மட்டுமே. கட்சிக்கென ஒரு நிருவாகக் குழுவோ, பொதுச்சபையோ இருப்பதாக எவரும் அறியவில்லை. அவ்வாறான அமைப்புக்களின் கூட்டம் எதுவும் நடைபெற்றதாகவோ அல்லது அந்தக் கூட்ட முடிவுகள்தான்கட்சியின்முடிவாகஅறிவிக்கப்பட்டதாகவோ வரலாறு இல்லை. அனைத்தும் விக்னேஸ்வரனின் தனி முடிவுதான்.

பொது வேட்பாளர் தொடர்பில் மிகவும் தீவிரமான கருத்துக்களை முன்வைத்தார். தாமே வேட்பாளரா வருவதற்கும் விருப்பம் தெரிவித்தார். இப்போ ஜனாதிபதி தேர்தலே தேவையில்லை, அதனை ஒரு வருடம் பிற்போடுவதே நாட்டுக்கு நல்லது என்ற கோசத்தை அடிக்கடி வலியுறுத்தி வருகிறார். தமிழர்களுக்கு எது நல்லதென்பதை ஒரு பக்கம் வைத்துவிட்டு நாட்டு நலனில் அதீத அக்கறை கொண்டவராக அவரது அறிக்கைகள் வெளிவருகின்றன. அறிக்கை எனும்போதுதான் அது தொடர்பிலும் மேலுமொரு விடயத்தைச் சுட்டிக் காட்டவேண்டியிருக்கிறது. அதாவது, அறிக்கை விடுவது மட்டுமே அவரது அரசியற் செயற்பாடு என்றாகிவிட்டுள்ளது. நேரடி நடவடிக்கை எதிலும் அவர் பங்கேற்பதில்லை. நாடாளுமன்றத்தில் பேச்சு வாசிப்பது கூட அத்தி பூத்தாற் போல என்றுதான் உள்ளது.

அவர் முதலமைச்சராக இருந்தபோது தமிழரசுக் கட்சிக்கும் அதன் தலைவருக்கும் கொடுத்த குடைச்சல்கள் பற்றிக் குறிப்பிடுவதாயின் நீண்ட கட்டுரை எழுதுவதாகிவிடும்.

அண்மைக் காலத்தில் கட்சிக்குள் இருந்துகொண்டே கட்சியை பகிரங்கமாக நிந்திப்பது என்ற கலாசாரத்தை கூட்டமைப்பினுள்ளும் பின்னர் தமிழரசுக் கட்சியுள்ளும் ஆரம்பித்துவைத்த நபர் இவர் என்று சொல்ல முடியும். அவரைத் தொடர்ந்து அடைக்கலநாதன், பிரேமச்சந்திரன், தவராசா, சித்தார்த்தன் என்று பட்டியல் நீண்டு செல்கிறது. எனினும் அந்தக் கலாசாரம் ஆரம்பித்தது இவருடன்தான்.

இப்போ அதுவல்ல விடயம். விடயம் இப்பேற்பட்ட, தமிழரசுக் கட்சிக்கு முழு விரோதமானதும், ஒரு நிலையற்ற கொள்கையும் கொண்ட ஒருவரது கட்சியின் மாநாட்டுக்கு தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் – அதுவும் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புள்ள ஒருவர் – விசேட அழைப்பாளராகச் சென்று பேசவுள்ளமைதான் கட்சியில் உள்ள பலரையும் முகம் சுழிக்கிற விடயமாக ஆக்கிவிட்டுள்ளது. சிறிதரன் அவர்கள் கட்சியின் முக்கியஸ்தர்கள், மூத்த உறுப்பினர்களின் வேண்டுகோளைப் புறக்கணித்து அங்கு விசேட விருந்தினராகச் செல்கிறார்.



சி.இரத்தினவடிவேல்

வேற்றுக் கட்சிகளின் மாநாடுகளில் பங்கேற்பதும் உரையாற்றுவதும் வழமைக்கு மாறான விடயமொன்றல்ல. ஆனால் அது ஒரு நிரந்தரமான அல்லது தற்காலிக இணக்கப்பாடான கொள்கைகள், கொண்ட கட்சியின் மாநாட்டில் பங்குபற்றுவதாகவே அமையும். கொள்கை முரண்பாடான கட்சியொன்றின் மாநாட்டில் பங்கேற்பதென்பது வழமைக்கு மாறானது. எங்கும் நடைபெறாத ஒன்று. தமிழரசுக் கட்சியை மிகக் கடுமையாக விமரிசிக்கும் ஒருவாரது கட்சி மாநாட்டில் பங்கேற்பதென்பது இங்கே விசனிக்கத்தக்கது.

சுமந்திரனை மிகக் கடுமையாக விமரிசிப்பவர் விக்னேஸ்வரன். அதுவேதான் இவர்கள் இருவரையும் இணைக்கும் பாலமாக இருக்குமோ என்ற எண்ணம் கட்சியினர் பலரின் மத்தியிலும் எழுவது தவிர்க்கப்பட முடியாதது. கட்சிக்குள்தான் இரு அணியாக அடித்துக் கொள்கிறார்களென்று பார்த்தால் கட்சிக்கு வெளியே இருந்தும் அதே செயற்பாட்டை முன்னெடுப்பதை கட்சி எப்படி நோக்கும் எனப் பலரும் அறிய விருப்ப முள்ளவர் களாக இருக்கிறார்கள்.

தலைவர் தெரிவில் வெல்ல முடியாமற் போனபோதும் தப்பும் தவறுமாகச் சேர்க்கப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட பொதுச்சபையின் 46 வீதமான உறுப்பினர்களின் ஆதரவை சுமந்திரன் பெற்றிருந்தார் என்பது வெறுமனே கடந்து போகக்கூடிய புள்ளிவிவரமல்ல. ஆகவே, இப்படித்தான் பகிரங்க முரண்பாடுகளுடன் கட்சி முன்செல்லப்போகிறதா என்றகேள்விநியாயமானதாகவே உள்ளது. கட்சி தொடர்பான செய்திகள் பலவும் இருவருக்குமிடையிலான முரண்பாடுகள் பற்றியதாக உள்ளனவேயன்றி தமிழர்களின் நலன் தொடர்பானவை அரிதாகவே உள்ளன. எமது காலத்தையம் நேரத்தையும் இந்த அபத்தங்களில் கரைத்து அரசியல் செய்வது அபத்தமானது என்றுதானே தோன்றகிறது. இவ்வாறான நிலையில், இத்தகைய பிணக்கப்பாட்டுடன் பயணிப்பதை விட கட்சி இரண்டாகப் பிரிந்து செயற்படுவது மேல் என்றுதானே கட்சியிலுள்ள உண்மையான கொள்கை விசுவாசிகள் எண்ணுவார்கள். அதுவேதான் இறுதியில் நடக்கப்போகிறதோ என்ற எண்ணம் இன்று கட்சியில் பலரின் மனத்திலும் தோன்றுகின்றது என்பதே துரதிர்ஷ்டவசமான எதார்த்தமாக உள்ளது.

சி.இரத்தினவடிவேல்

# 19 ஆவது திருத்தம் குறித்த ஜனாதிபதியின் கருத்திற்கு மைத்திரிபால சிறிசேன பதில்

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையின் எல்லையற்ற அதிகாரங்களையும் குறைத்து, ஜனாதிபதி பதவிக் காலத்தை 6 வருடங்களில் இருந்து 5 வருடங்களாக குறைப்பதே 19 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் நோக்கம் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் கருத்திற்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனை கூறியுள்ளார்.



அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் ஜனாதிபதி மற்றும் நாடாளு மன்றத்தின் அதிகூடிய பதவிக் காலத்தை 5 வருடங்களாக குறைக்காமல் விட்டமைக்கு ஜயம்பதி விக்ரமரத்னவின் அனுபவக் குறைவினால் ஏற்பட்ட தவறே காரணம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளிக் கிழமை கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் உரைக்கு ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்ரமரத்ன நேற்று முன்தினம் மறுப்பு தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், பொலன்னறுவையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# கோயில் நகையை அபகரித்தாராம் உதவிக் குருக்கள் ஒருவர் கைது!



யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறையில் உள்ள புளியங்கூடல் இந்தன் முத்துவிநாயகர் கோவில் நகைகளை அபகரித்த குற்றச்சாட்டில் 28 வயதான உதவிக் குருக்கள் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆலயத்துக்குள் பாதுகாப்பாகப் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த 62 பவுண் நகைகள் மற்றும் 8 லட்சம் ரூபா பணம் என்பன காணாமல் போயிருந்தன. இது தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

# முட்டை இறக்குமதி குறித்து அரசாங்கம் மீண்டும் கவனம்

முட்டையை இறக்குமதி செய்வது தொடர்பில் அரசாங்கம் மீண்டும் கவனம் செலுத்தியுள்ளது.

வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

உள்ளூர் சந்தையில் முட்டையின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துவருவதுடன், தற்போது முட்டை ஒன்று 49 ரூபாவுக்கும் 55 ரூபாவுக்கும் இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

இதனைக் கருத்திற் கொண்டு முட்டையை இறக்குமதி செய்வது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.





# துபாய் ஆணழகன் போட்டியில் இலங்கை ராஜ்குமார் முதலிடம்

துபாய் எமிரேட்ஸில் இடம்பெற்ற ஆணழகன் போட்டியில் 80 கிலோகிராம் எடைப் பிரிவில் கலந்துகொண்ட இலங்கையைச் சேர்ந்த மாதவன் ராஜ்குமார் முதலிடத்தைப் பெற்று பதக்கத்தை வென்றுள்ளார்.

இதேவேளை, 2019ஆம் ஆண்டு நடத்தப்பட்ட 53ஆவது ஆசிய ஆணழகன் போட்டியில் பங்குபற்றி மாதவன் ராஜகுமாரன் வெண்கல பதக்கத்தைப் பெற்றுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழு அடுத்த வாரம் இலங்கைக்கு வருகின்றது




சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழுவொன்று அடுத்த வாரம் இலங்கைக்கு வரவுள்ளது.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் அதற்கான வழிவகைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இந்தத் தூதுக்குழு இலங்கை வரவுள்ளது.

எவ்வாறாயினும், சர்வதேச நாணய நிதியத்தின் இந்த தூதுக்குழு நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டம் தொடர்பில் மதிப்பாய்வை மேற்கொள்ளாது என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

# தேசியப் பாதுகாப்பு கற்கை நிலையத்தின் முன்னாள் பணிப்பாளர் அஸங்க கைது!

தேசியப் பாதுகாப்பு கற்கைகள் நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் அஸங்க அபேகுணசேகர கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் முன்னெடுத்துள்ள விசாரணை ஒன்றுக்கு அமைய அவருக்கு வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நாட்டை விட்டு வெளியேற முயன்றபோது குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.







# நாட்டு மக்கள் வாழ்வில் சுபீட்சம் ஏற்படுவதற்கு ரணில் விக்கிரமசிங்க ஆட்சி தொடர வேண்டும்

## எம்.ராமேஷ்வரன் எம்.பி கூறுகின்றார்

"இலங்கையின் பொருளாதாரம் அபிவிருத்தியை நோக்கி பயணிக்க வேண்டுமெனில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி தொடர வேண்டும். நாட்டு மக்களும் இதனை உணர்ந்துள்ளனர்."

– இவ்வாறு இ.தொ.காவின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்துள்ளார்.

பல வருட காலமாக குன்றும் குழியுமாக காணப்பட்ட பூண்டுலோயா முதல் டன்சினன் வழியாக நுவரெலியா செல்லும் பிரதான பாதை, 2024 ஆம் ஆண்டின் 1000 கி.மீ வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 130 மில்லியன் ரூபா செலவில் கார்ப்பட் இடப்பட்டு போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன மற்றும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரன் ஆகியோர்களால் மக்கள் பாவனைக்கு நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"எமது அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கோரிக்கையின் பிரகாரமே இவ்வீதி புனரமைக்கப்பட்டு இன்று மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டுளது. மலையக மறுமலர்ச்சிக்காக அவர் தன்னை முழுமையாக அர்ப்பணித்து ஜனாதிபதியுடன் உதவியுடன் பல அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதால்தான் நெருக்கடியான கட்டங்களில்கூட எமது மக்களுக்காக சேவைகளை வழங்க முடிகின்றது.



விமர்சன அரசியல் என்பது இலகுவானது, அதனையே இன்றைய சில மலையக அரசியல்வாதிகள் செய்து வருகின்றனர். ஆனால் சவாலை ஏற்று, நெருக்கடியான நேரங்களில்கூட மக்களுக்காக செயற்படுவதே உண்மையான அரசியல். அதனையே நாம் செய்துவருகின்றோம்.

இன்று வீரவசனம் பேசும் அரசியல்வாதிகளெல்லாம் நாடு வீழ்ந்தபோது சவாலை ஏற்க முன்வரவில்லை. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் நாட்டை பொறுப்பேற்றார். இன்று நாடு முன்னோக்கி பயணித்துக்கொண்டிருக்கின்றது. நிறுத்தப்பட்டிருந்த அபிவிருத்தி பணிகள் மீள ஆரம்பமாகியுள்ளன. இதற்கு ஜனாதிபதியின் ஆளுமையும், தலைமைத்துவமும் காரணமாகும். எமது அமைச்சரும் அமைச்சரவையில் இருந்து ஜனாதிபதிக்கு பக்கபலமாக இருந்து வருகின்றார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்த நாடு எப்படி இருந்தது? இன்று எவ்வாறு உள்ளது? பொருள்களின் விலைகள் குறைவடைந்துள்ளன. மின்சாரக் கட்டணம் குறைந்துள்ளது. நீர் கட்டணமும் மறுசீரமைக்கப்பட உள்ளது. எனவே, இந்நாடு முன்னேற வேண்டுமெனில், நாட்டு மக்கள் வாழ்வில் சுபீட்சம் ஏற்பட வேண்டுமெனில் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி தொடர வேண்டும்." – என்றார்.







# இன்றைய ராசி பலன்கள் - 22.07.2024




இன்று உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் வளர்ச்சி நோக்கி முன்னேறுவீர்கள். இன்று புதிய தொடர்புகள் மற்றும் நண்பர்களைப் பெறுவீர்கள்.

பணியில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். நீங்கள் கூடுதல் முயற்சி செய்து சிறந்த செயல்திறனை அளிப்பீர்கள். உங்களின் சிறந்த தவகல் தொடர்பு திறமை மூலம் பல நன்மைகள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் திருப்தி காணப்படும். அவருடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.

தொழில் செய்பவர்கள் நற்பலன் காணும் அதிர்ஷ்டமான நேரம். புதிய தொழில் தொடர்புகள் பெறலாம். அதன் மூலம் அதிக பணம் பெற இயலும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். உங்கள் இலக்குகளை அடைய மிகவும் பொறுமை வேண்டும். நம்பிக்கையுடன் இருந்தால் நல்ல வளர்ச்சி காணலாம்.

உங்கள் முன் இருக்கும் சவாலான பணிகளை முடிக்க கடினமாக உழைக்க வேண்டும். திட்டமிட்டு பணிபுரிவதன் மூலம் உங்கள் பணிகளை திறமையாக முடிக்கலாம்.

உங்கள் துணையுடன் அன்பை பகிர்ந்துகொள்வதற்கு சாதகமான நாள் அல்ல. சுமூகமான உறவு அமைய நீங்கள் அனுசரித்து நன்கு புரிந்துணர்வுடன் நடத்தல் வேண்டும்.இன்று பணப்புழக்கம் போதிய அளவு இருக்காது.




இன்று நல்ல பலன்கள் காண்பதற்கு சாதகமான நாள் அல்ல. இன்று நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். கடுமையான சூழ்நிலையை புத்திசாலித் தனமாக கையாள வேண்டும். சிறந்த விளைவுகளை ஏற்படுத்தும் செயல்களில் அமைதி காண வேண்டும்.

உங்கள் பணிகளில் தவறுகள் நேரலாம். அதிக கவனம் செலுத்துவதன் மூலம் நீங்கள் சிறப்பாக செயலாற்றலாம்.

உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இன்று ஏற்படும் தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும்.

பண இழப்பு காணப்படுகின்றது. உங்கள் நிதிநிலையைக் கையாளும்போது நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.




இன்று ஆக்கப்பூர்வமான பலன்கள் கிடைக்கும். அது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். உங்கள் நண்பர்களின் ஆதரவும் அதன் மூலம் நன்மையும் பெறுவீர்கள்.

உங்கள் செயல்திறனில் சிறந்த வளர்ச்சி காணப்படும். சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். பொதுவாக திருப்தியான நிலை காணப்படும்.உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் முன் மகிழ்சியான வாழக்கை உள்ளதாக நினைத்து மகிழ்வீர்கள். புதிய மனிதர்களின் சந்திப்பு மகிழ்ச்சியை அளிக்கும்.இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். கையிலுள்ள உபரிப் பணத்தைக் கொண்டு நீங்கள் பயனுள்ள சொத்தை வாங்குவீர்கள்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. பதட்ட உணர்வு காணப்படும். பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இந்த உணர்வுகளை நீங்கள் சமாளிக்க வேண்டும்.நல்ல பலன் காண நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

நீங்கள் நம்பிக்கையுடனும் மன உறுதியுடனும் செயலாற்ற வேண்டியது அவசியம். இதன் மூலம் எதிர்கொள்ளும் தடைகளை ஜெயிக்க முடியும்.

கருத்து வேறுபபாடு காரணமாக தவறான புரிந்துணர்வு காணப்படும். உங்கள் துணையின் கருத்துக்களை புரிந்து கொண்டு இருவரும் பரஸ்பரம் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

பண வரவுக்கு இன்று சாத்தியமில்லை. கூடுதல் செலவுகள் காணப்படும்.




இன்று நீங்கள் உற்சாகமான ஆற்றலுடன் காணப்படுவீர்கள். நீங்கள் குறைந்த எதிர்பார்ப்புடன் கடினமாக உழைப்பீர்கள். இதனால் நற்பலன்கள் ஏற்படும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் நீங்கள் அமைதியாக இருக்க முடியும்.

இன்று பணியில் மந்தத் தன்மை காணப்படும். உங்கள் செயல்களைக் கையாளும்போது பொறுமை இழப்பீர்கள். கவனமுடன் இருந்தால் சிறப்பாக செயலாற்ற இயலும்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் அதிருப்தி காணப்படும். இருவரும் கலந்தாலோசிக்க வேண்டியது அவசியம்.உங்கள் வீட்டின் புனரமைப்புக்காக பணம் செலவு செய்வீர்கள்.




இன்று பலன்கள் கலந்து காணப்படும். அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். இன்றைய செயல்களைக் கையாள நீங்கள் பொறுமையாகவும் அமைதியாகவும் இருக்க வேண்டியது அவசியம். உங்கள இலக்குகளை அடைய கடினமாக உழைக்க வேண்டும். அது உங்கள் சுய முயற்சியை சார்ந்துள்ளது. இன்று அதிகப் பணிகள் காணப்படும். நற்பலன் களை அடைய உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங் கமைக்க வேண்டியது முக்கியம்.குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நல்ல புரிந்துணர்வு ஏற்பட இந்தப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும். பணப்புழக்கம் இன்று குறைந்து காணப்படும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள இயலாது.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை அடைய புத்திசாலித்தனமாக முயல்வீர்கள். இது உங்களின் வளர்ச்சிக்கு உதவும்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை பணியிடத்தில் திருப்திகரமான நிலை இருக்கும். நீங்கள் தரமான வகையில் பணிகளை முடித்துத் தருவீர்கள். இதனால் உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு மேம்படும்.

இன்று பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்கும். கையில் உபரிப் பணம் காணப்பட்டு மகிழ்ச்சியாக இருப்பீர்கள். ஆன்மீக காரியங்களுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.07.2024




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். இசை கேட்பது அல்லது திரைப்படம் பார்த்தல் போன்ற நிகழ்சிகளின் மூலம் நீங்கள் இன்றைய நாளை சிறப்பக கையாண்டு மகிழ்ச்சியாக இருக்கலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். எனவே உங்கள் பணியில் தாமதங்கள் காணப்படும்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். இரவரும் எதிரெதிர் கருத்து கொண்டிருப்பீர்கள். இதனால் தவறான புரிந்துணர்வு காணப்படும்.தேவையற்ற செலவுகள் கவலையை அளிக்கும். அதிக பணம் சேமிக்கும் வாய்ப்பு குறைவாக இருக்கும்.இன்று எந்த விதமான ஆரோக்கியப் பிரச்சினையும் இருக்காது.




இன்று நீங்கள் பிறருடன் பழகும் போது கவனமாகப் பழக வேண்டும். சிறிதளவு பரிச்சயமானவர்களிடம் இன்று தவறான புரிந்துணர்வு ஏற்படும். தேவையற்ற விளைவுகளை தவிர்க்க நீங்கள் உங்கள் வார்த்தைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. நல்ல பலன்களைக் காண நீங்கள் முறையாக திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையேயான உறவுமுறை பாதிக்கும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொண்டு மனம் திறந்து பேசுவதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கலாம்.




இன்று உணர்ச்சி வசப்படுவதை விட யதார்த்தமாக இருப்பதற்கான சூழ்நிலை காணப்படும். இன்றைய சவால்களை சந்திக்க நீங்கள் அமைதியாக நம்பிக் கையுடன் இருக்க வேண்டும் வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் நீங்கள் மன அமைதி பெறலாம்.

உங்கள் செயல்திறனை மேம்படுத்த நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். பணியில் தவறுகளை தவிர்க்க வேண்டும். சக பணியார்களிடமிருந்து தொல்லைகளை எதிர் கொள்ள நேரும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். எனவே செலவுகளை கட்டுபடுத்த வேண்டும்.




இன்று வளர்ச்சி காண்பதற்கு மிகவும் உகந்த நாள். இன்று வாழ்க்கையின் உண்மைகளை அறிந்து கொள்வதற்கான நேரம். இது மகிழ்ச்சி தரும் கற்றல் அனுபவமாக இருக்கும்.

பணியில் சிறந்த வளர்ச்சி காணப்படும். உங்கள் அனைத்துப் பணிகளிலும் திருப்தி காண்பீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க இயலும்.

இன்று அதிகப் பணம் காணப்படும். கையிலுள்ள பணத்தை பயனுள்ள நோக்கங்களுக்காக செலவு செய்வீர்கள்.இன்று நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.



